விலை. ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது


ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD


RAMCO CEMENT

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி24 ஞாயிற்றுக்கிழமை (10.11.2002) தொலைபேசி- 2223378 ஒலி 326

# ரணில் - பிரபா சந்திப்பிற்கான ஏற்பாடுகள்



## ஒஸ்லோவில் ஆராயப்படும்



(லண்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் நேரடியாகச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவது குறித்து ஒஸ்லோ மாநாட்டின் போது ஆராயப்படுமென்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து தகவல் வெளியாகியுள்ளது.

இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு குறித்து நேரடியாக ஆராய்வதற்கும் சமாதான செயற்பாடுகளில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் இரு தலைவர்களும் நேரடியாகச் சந்தித்துப் பேசவேண்டியது அவசியமானது என்ற அடிப்படையிலேயே இந் நேரடிச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந் நேரடிச் சந்திப்பு தொடர்பான சகல ஏற்பாடுகளையும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேற்கொள்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் எதிர்வரும் 25ந் திகதி நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் இவ் விடயம் குறித்து ஆராய்வர் என்று நம்பப்படுகிறது.

அநேகமாக இரு தலைவர்களதும் நேரடிச் சந்திப்பு வெளிநாட்டில் இடம்பெறாதென்றும் அது வன்னிப் பெருநிலப்பரப்பிலேயே இடம்பெறும் என்றும் செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவிக்கின்றது. (இ)

### சமாதான முயற்சி அமெரிக்கா மகிழ்ச்சி

# இலங்கைக்கு தாராள நிதி உதவி வழங்க அமெரிக்கா தயார்!

## அமைச்சர் மிலிந்தவிடம் ஆம்டேஜ் உறுதி

(வாஷிங்டன்)

**இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்ந்து தாய்லாந்தில் நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னேற்றம் கண்டுவருவதால் இலங்கைக்கு உடனடியாக நிதி உதவி வழங்குவதற்கு அமெரிக்கா தயாராக இருப்பதாக அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ஆம்டேஜ் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

தாய்லாந்தில் நடந்து முடிந்த முதற்கட்ட இரண்டாம் சுற்று சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக அமெரிக்க இராஜாங்க அமைச்சுக்கு எடுத்துக் கூறுவதற்காக அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று முன்தினம் அமெரிக்காவிற்கு சென்றிருந்தார்.

அமெரிக்கா சென்ற மிலிந்த மொறகொட அங்கு அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ஆம்டேஜ்ஜை சந்தித்து தாய்லாந்துப் பேச்சுவார்த்தை தொடர்பாக விளக்கிக் கூறியதை அடுத்து இலங்கைக்கு உடனடியாக நிதியுதவி வழங்க அமெரிக்கா தயாராகவுள்ளது என்றும் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னேற்றம் குறித்து அமெரிக்கா

(10ம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பியின் உறுப்பினர் அனலைதீவில் மர்ம மரணம்

(அனலைதீவு)

அனலைதீவில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் இவரது சடலம் அனலைதீவிலுள்ள வீடொன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

எஸ்.புஸ்பராஜா(வயது 30) என்ற ஈ.பி.டி.பி உறுப்பினரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது மரணம் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் தீவக அரசியல் துறை கோட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பிரஸ்தாப நபர்

(10ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி

## அரசு – புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் பங்குபற்றும்

## ஜனாதிபதி நிராகரிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் சிபார்சுக்கு அனுப்பி வைக்கப்பட்ட எட்டு புதிய அமைச்சர்களின் பெயர்ப்பட்டியலை ஜனாதிபதி நிராகரித்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமைச்சரவை அந்தஸ்து இல்லாத ஏழு அமைச்சர்களினதும் ஒரு பிரதி அமைச்சரினதும் பெயர்ப் பட்டியலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதியின் சிபார்சுக்கு அனுப்பி வைத்திருந்தார் (ம)

### அரசு – புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் பங்குபற்றும்

# பாதுகாப்பு உப குழுவின் முக்கிய மாநாடு இன்று ஓமந்தையில் கூடுகிறது

(கிளிநொச்சி)

வடக்குக் கிழக்கில் உள்ள இராணுவத்தின் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துதல், கண்ணிவெடி அகற்றுதல் தொடர்பாக பாதுகாப்பு உப குழுவின் முக்கியத்துவம் வாய்ந்த மாநாடு ஒன்று இன்று ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் இலங்கை அரசுப் பிரதிநிதிகளுக்கும தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

தாய்லாந்தில் நடந்து முடிந்த முதற் கட்ட இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பாக இம் மாநாட்டில் ஆராயப்படவுள்ளது.

ஏற்கனவே திட்டமிட்டபடி இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாக உள்ள இம் முதலாவது மாநாட்டில் இருதரப்பில் இருந்து தலா ஒன்பது பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கை அரசுப் பிரதிநிதிகள் சார்பில் பேச்சுவார்த்தைக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள்

(10ம் பக்கம் பார்க்க)


SERENDIB

விமான சேவை

எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேச சேவையிலும் இருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகின்றோம்.




உள்நாட்டில் விமானப் பயணிகளுக்கு மிகவும் இலகுவான கட்டணத்தையும் அன்பான உபசரிப்பையும் இலகுவான பயணத்தினையும் ஏற்படுத்திய பெருமையும் எமக்கே

SERENDIB - MANO

13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 - 2223916, 0777 - 801038, 0777 - 517019

500, காலி வீதி, வெள்ளவத்தை.
T.P : 505632
FAX : 500626

[C/5236]


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**சிறு விளம்பரம்**

**விற்பனைக்கு**

யாழ். நகர மத்தியில் கடைகள்வாடகைக்கு/விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- பைனியர் ரெயிலர் இல. 9 நவீன சந்தை மேல்மாடி யாழ்ப்பாணம். (6178)

**வீடு தேவை**

வர்த்தகர் ஒருவருக்கு, சகல வசதிகளையும் கொண்ட வீடொன்று தேவை. நல்லூருக்கும் K K S. வீதிக்கும் இடையில் அமைந்திருத்தல் விரும்பத்தக்கது. தொடர்பு; விளம்பர இல. 251 வலம்புரி 15, வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம்.

(6178)


# மோதலில் படுகாயமடைந்த பல்கலை மாணவன் மரணம்

(கொழும்பு)

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் போது படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலை அதி தீவிரபிரிவில் சிகிச்சையளிக்கப்பட்ட மாணவர் ஒருவர் நற்றுக்காலை உயிரிழந்துள்ளார்.

வர்த்தக பீட 3 ஆம் வருட மாணவனான ஒபிற்றிகல சம்பந்த (வயது-24) என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.

இம்மாணவனது பிரேத பரிசோதனைகள் நேற்று நடைபெற்றதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் ஹிக்கவீரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இன்னுமொரு மாணவரினதும் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்,

பகிடிவதை சம்பந்தமாக ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளே இம் மாணவனின் உயிரிழப்புக்கு காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இம் மோதல் சம்பவத்துடன் தொடர்பு பட்ட சுமார் 50 மாணவர்கள் தலைமறைவாகி உள்ளனர். இவர்களை தேடிக்கண்டு பிடிப்பதற்காக பொலிஸ் குழுக்கள் 3 அமைக்கப்பட்டுள்ளன. (உ-8)

## முல்லையில் நெற் செய்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்முறை 7 ஆயிரத்து 515 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை பண்ணப்பட்டுள்ளது.

அரசு விதித்துள்ள பொருளாதாரத்தடை காரணமாக இங்கு கடந்த சிலஆண்டுகளில் விவசாயத்தில் ஈடுபாடு குறைவாக இருந்ததும் தற்போது பொருளாதாரத்தடை நீக்கப்பட்டதையடுத்து போதியளவு விவசாய உள்ளீடுகள் தாராளமாக கிடைப்பதால் விவசாயிகள் ஆர்வத்துடனும் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது (உ- 10)

## போராளிகள் பலர் விடுதலை

(ஸ்ரீநகர்)

ஜம்மு - காஷ்மீரின் புதிய கூட்டணி அரசாங்கம்தடுப்புக் காவலில் இருந்தபலபோராளிகளை விடுதலைசெய்துள்ளது.

## 285 பட்டதாரிகளுக்கு அடுத்தவாரம் நியமனம்

(கொழும்பு)

அரசாங்க சேவைகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகள் 285பேருக்கு அடுத்த வாரம் நியமனங்கள் வழகப்படவுள்ளதாக பொதுநிர்வாக முகாமைத்துவ அமைச்சர் வஜிர அபயவர்த்தன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அரசாங்க சேவைகளுக்கான ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் சுனில் கரந்தன கெட்டி குற்றம்சாட்டியபோது இதற்கு பதிலளித்த அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நிர்வாகசேவை போட்டிப் பரீட்சையில் 616 பேர்தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் முதல்கட்டமாக 285 பேருக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## தொண்டர் படைப் பிரிவின் கட்டளை அதிகாரியாக கொட்டேகொட நியமனம்

(கொழும்பு)

தாய்லாந்தில் அண்மையில் நடந்துமுடிந்த இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுக்களில் அரச தரப்பு ஆலோசகராகக் கலந்து கொண்ட மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொடவுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

தொண்டர் படைப்பிரிவின் கட்டளை அதிகாரியாக இவர் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, பிரதி கட்டளையிடும் அதிகாரியாக மேஜர் ஜெனரல் அன்டன் விஜேந்திரா தொடர்ந்தும் பதவி வகிப்பார். (உ)

## அரசலிகிதர்வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

அரச இலிகிதர் வெற்றிடங்களுக்கான பரீட்சைகள் வெகு விரைவில் நடத்தப்படும் என பொதுநிர்வாக முகாமைத்துவ அமைச்சர் வஜிர அபயவர்த்தன அறிவித்துள்ளார்.

அரசதுறைகளில் நிலவும் லிகிதர் வெற்றிடங்களை நிரப்பவேண்டிய தேவை இருப்பதாகவும்,

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இரண்டாவது வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்க சேவைக்கு ஆள்சேர்ப்பது இல்லை என்றயோசனை இதற்குத் தடையாக இருக்க மாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## பிரபா மீதான தீர்ப்பை எதிர்த்து மன்னாரில்பேரணி

(மன்னார்)

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு கொழும்பு உயர்நீதிமன்றம் விதித்த 200 வருடக் கடூழியச் சிறைத்தண்டனைத் தீர்ப்பைக் கண்டித்து எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மன்னாரில் ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் செய்துவருகின்றது. (உ)

## சமாதானக் குழு நடத்திய போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கியூடெக்- கரித்தாஸ் நிறுவன சமாதானக் குழுவினர் நடாத்திய பேச்சு, கட்டுரை, ஓவியப் போட்டிகளில்வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும்வைபவம் நேற்று கியூ டெக் இயக்குநர் அருட்தந்தை சி ஜி. ஜெயக்குமார் தலைமையில் இடம் பெற்றது

மேற்படி போட்டிகளில்பரிசு பெற்றவர்களின் பெயர்கள் வருமாறு,

**கட்டுரைப்போட்டி**

முதலாம்இடம்-ச: அனுசா,
இரண்டாம்இடம்-கே.ஜெனி சில்வியா,
மூன்றாம்இடம்-பே: தினேஸ் குமார்.
நான்கம் இடம்- ஏ: நித்திய கல்யாணி.

**ஓவியப் போட்டி**

முதலாம் இடம்- ந: ஜிப்றி,
இரண்டாம் இடம்- எஸ் பிராங்ளின்,
மூன்றாம்இடம்-துஷ்யந்தன்
நான்காம் இடம்- தாரணி:

**பேச்சு போட்டி**

(பிரிவு I)

முதலாம் இடம்- க: உஷாந்தன்
இரண்டாம் இடம்- சி.சுமினித்தா,
மூன்றாம் இடம்- க.ஜஸ்மிலா:

(பிரிவு II)

முதலாம் இடம்- ம: அருளினியன்,
இரண்டாம் இடம்-இ: அனுசியா,
மூன்றாம் இடம்- பொ: றினோசா:

(பிரிவு III)

முதலாம் இடம்-ஜி: டிலானி பவித்திரா,
இரண்டாம் இடம்- க: சுகாஸ்,
மூன்றாம் இடம்- கி: பகதான்யா:

(உ)

## இராசி பலன்

(10- 11- 2002)

(ஐப்பசி 24ஞாயிறு)

சஷ்டி மாலை 6 44 வரை
உத்தராடம் பி இ 2 21 வரை
இராகுகாலம் 4 35- 6. 05
நல்லநேரம் 9 05- 10 35
கந்தஷஷ்டி விரத முடிவு
சூரசம்ஹாரம், அமிர்தம்

**மேடம்**

அதிர்ஷ்டயோகம், சுபநிகழ்வு, நல்லசெய்தி, முயற்சி கைகூடும்

**இடபம்**

புதிய சிந்தை, வேலைப் பளு, அச்சமானநிலை, முயற்சிதாமதம்

**மிதுனம்**

உறவினர் மனஸ்தாபம், காரியதாமதம், போசனசுகம், வீண்பயம்

**கடகம்**

காரிய அனுகூலம், அபூர்வ சந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி, தெய்வ தரிசனம்

**சிங்கம்**

சத்துருஜெயம், மன மகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், செய்தொழில் முன்னேற்றம்

**கன்னி**

காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம், குடும்பக் கவலை, சிறுவியாதி

**துலாம்**

ரோகபயம், சயனசுகக் குறைவு, போசன சுகம், அற்பர் உறவு

**விருச்சிகம்**

உறவினர் வருகை, காரிய நன்மை, இனிய சம்பவம், தனவரவு

**தனுசு**

வாக்கு கலகம், தொழில் சிந்தை, தனவிரயம், கௌரவக் குறைவு

**மகரம்**

போசனசுகம், தெய்வ சிந்தை, பெரியோர் ஆதரவு, முயற்சி பலிதம்

**கும்பம்**

நித்திரைக் குறைவு, கோபப் படுதல், முயற்சி தாமதம், பிதாசிந்தை

**மீனம்**

நினைத்த காரியம் கைகூடும், தெய்வ தரிசனம், பெருமையடைதல், பொருள் சேர்க்கை

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

**வளவன்**

## பல்கலை மாணவர் மரணத்தின் பின்னணியில் ஜே. வி. பி

### பல்கலை மாணவர் பேரவை குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொழும்பு ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வர்த்தகபீட மாணவன் உயிர் இழந்ததற்கு கடும் போக்கான மாணவர் இயக்கங்களை வழி நடத்தும் மக்கள் விடுதலை முன்னணி கட்சி பதில் கூற வேண்டும் என கொழும்பு பல்கலைக்கழக மாணவர் பேரவை தெரிவித்துள்ளது

கொழும்பு பல்கலைக்கழகத்திலும் இது போன்ற சம்பவங்கள் இடம்பெற்றதாகவும், அதற்கு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமே பொறுப்பு எனவும் சங்கத்தின் தலைவர் றிபந்த அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

மாணவரிடையே கலவரத்தையும் மோதல்களையும் ஏற்படுத்தி வரும்மக்கள்விடுதலை முன்னணியினர் அச்சமின்றி வாழக்கூடிய சமூகம் பற்றி பேசிவரும் இலட்சணம் இது தானா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். (உ- 8)

## விஞ்ஞானச் சங்கத்தின் பேச்சுப் போட்டி முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் நடத்திய பேச்சுப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதலாம் இடம்-த. கனுஜா நெல்லியடி ம ம.வித்தி

இரண்டாம் இடம்- சி: சாலினி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

மூன்றாம் இடம்-செ. பிரசாத் யாழ் இந்துக் கல்லூரி

திறமைச் சான்றிதழ் பெறுவோர் விபரம்.

ச சுஜந்தாகினி- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

ப ஜெயதர்சினி- யாழ்ரன் கல்லூரி. (உ)

## கொலரா நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சின்ன மடுப் பகுதியில் கொலரா நோயைக் கட்டுப்படுத்த சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்த வகையில் மேற்படி கொலரா தொற்று நோயினால் பீடிக்கப்பட்டவரைக் கொண்ட குடும்பத்தினருக்கு நோய்த் தடுப்பு மருந்து வழங்கப்பட்டுள்ளதுடன் இக்கிராமத்தில் உள்ள கிணறுகளுக்கு குளோரின் இடப்பட்டும் கொலரா நோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கும் நடத்தப்பட்டும் வருகின்றது.

இக்கருத்தரங்கில் பொது மக்கள் அனைவரையும் கொதித்து ஆறிய நீரைப் பருகுமாறு அறிவுறுத்தப்பட்டு வருகின்றது. (உ-75)

## பயங்கரவாத சந்தேக நபர் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த வி.விநாயகமூர்த்தி என்பவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கொழும்பு நகர பாதுகாப்பு நிலையங்கள் குறித்து தகவல் அளித்தார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர் கைதுசெய்யப்பட்டார்.

இவருக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சட்டமா அதிபர் கமல சபேசன் இவர் மீதான வழக்கை வாபஸ் பெற்றதை அடுத்து மேற் குறிப்பிட்ட நபர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (உ-8)

# பிரதமர் தந்த வாக்குறுதியை மீறினால்

# எமது அரசியல்பலத்தை காட்டுவோம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தை புறக்கணித்து வந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சிலர், பிரதமருடன் காணப்பட்ட உடன்பாட்டை அடுத்து, புறக்கணிப்பைக் கைவிட்டுள்ளார்கள்.

இவ்வாறு கைவிட்டுள்ளவர்களில் ஒருவரான அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஐ அன்வர் இஸ்மாயில் பி. பி. சி. தமிழ்ச்சேவைக்கு அளித்த செவ்வி இங்கே தொகுத்துத் தரப்படுகிறது.

> எமது ஐந்து அம்சக் கோரிக்கைகளின் நியாயத்தை ஏற்றுக்கொண்ட பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்க, நாங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய திருப்திசரமான பதிலைத் தந்துள்ளார்.

கேள்வி:

நாடாளுமன்ற புறக்கணிப்பை கைவிட்டதன் காரணம் என்ன?

பதில்:

ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து பகிஷ்கரிப்பு செய்துவந்தோம். இந்த ஐந்து கோரிக்கைகளையும் பிரதம மந்திரி ஏற்றுக்கொண் நாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய திருப்திகரமான பதிலைத் தந்திருக்கிறார். அதனடிப் படையில் கைவிட்டுள்ளோம்.

கேள்வி:

பிரதமர் என்ன திருப்திகரமான பதிலைத் தந்தார்கள்?

பதில்:

குறிப்பாக, முஸ்லிம் தனி அலகு தொடர்பாக வலியுறுத்தியிருந்தோம். இது தொடர்பிலே பிரதம மந்திரி முஸ்லிம்களுக்கு தனி அலகு கிடைப்பதற்கான சில முயற்சிகளை அரசாங்கத்தினூடாக எடுப்பதாக உறுதி அளித்துள்ளார்.

கேள்வி:

மற்றைய கோரிக்கைகள் எவை?

பதில்:

ஏனைய கோரிக்கைகளை பொறுத்தவரையில் வடகிழக்கிலே வாழுகின்ற முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசங்களை இணைத்த அமைப்பினை பொறுத்தவரையில் அதையிட்டுத்தான் நாங்கள் சர்ச்சைப் பட்டுக்கொண்டு இருந்தோம். ஏனென்றால் வடகிழக்கிலே பாதிக்கப்பட்ட முஸ்லிம் பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு இந்தக் கோரிக்கையை முன்வைத்த போதிலும் பலரின் அலட்சிய பார்வை இருந்தது. இன்று பிரதம மந்திரி தெரிவித்திருக்கும் உறுதிமொழியின் அடிப்படையில் வடகிழக்கிலே வாழ்கின்ற முஸ்லிம்களை உள்ளடக்கிய உபகுழு ஒன்றை தருவதாக வாக்குறுதி அளித்திருப்பதாக தெரிவித்திருக்கின்றார்கள். அது ஒரு ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயமாக இருக்கின்றது.

நாங்கள் நிபந்தனையுடனேயே பகிஷ்கரிப்பைக் கைவிட்டுள்ளோம்.

கேள்வி:

அந்த நிபந்தனைகள் என்ன?

பதில்:

பிரதமர் தந்த வாக்குறுதிகள் மீறப்படுகின்றபோது மீண்டும் எங்களுடைய அரசியல் பலத்தைக் காட்ட வேண்டிய அவசியம் இருக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம். பிரதம மந்திரி இந்த வாக்குறுதியை மீறமாட்டார். நாங்கள் தொடர்ந்தும் இந்த அரசிற்கு ஆதரவு அளிப்பதாக உள்ளோம்.

கேள்வி:

உங்களுடைய இந்த நாடாளுமன்ற புறக்கணிப்பு சமாதான முயற்சிகளுக்கு பாதகமாக அமைந்துவிடும் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளனவே,

பதில்;

நிச்சயமாக அந்த குற்றச்சாட்டுக்களைநாங்கள் வன்மையாககண்டிக்கின்றோம்,

ஏனென்றால், சமாதானம் என்றால் இலங்கையில் உள்ள சகல சமூகங்களுக்கும் அந்தச் சமாதானம் வேண்டும்.

இன்று அதிகாரப்பரவலாக்கல் என்பது சகல சமூகங்களுக்குமான பரவலாக்கல் என்ற அடிப்படையில் உள்ளது.

இந்த அடிப்படையிலே வடகிழக்கில் வாழுகின்ற முஸ்லிம்களுக்கும் சமத்துவமான சமாதானம் வேண்டும்என்பதனை வலியுறுத்துவதேயன்றி இந்தச் சமாதானத்தை குலைக்க வேண்டும் என்றுஒரு துளியேனும் எங்களுக்கு எண்ணம்கிடையாது

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி அமைத்துள்ள இந்த வேளையில் சமாதானம் வரவேண்டும் என்பதில் முனைப்பாக இருப்பவர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் கட்சியினரே. இதையாரும் மறந்துவிடக் கூடாது.

கேள்வி:

நீங்கள் எடுத்த இந்த நடவடிக்கை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு எதிரான நடவடிக்கை என்றும் குற்றம்சாட்டப்பட்டது இது பற்றி என்ன கூறுகிறீர்கள்.

பதில்:

நிச்சயமாக இது தலைமைத்துவத்திற்குஎதிரான போராட்டம் அல்ல.

கேள்வி:

முஸ்லிம் காங்கிரசுக்குள் பிளவு, பிரிவு ஏதாவது இருக்கின்றதா?

நிச்சயமாக எந்த பிளவும் இல்லை, சில விடயங்களில் கருத்து வேற்றுமைகள் இருந்த போதும் ஐந்துஅம்சக் கோரிக்கைகளை முன்வைத்து எமது உரிமைகளைப் பெறும் விடயத்தில் 12 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரே வகையான கருத்தையே கொண்டுள்ளனர். (உ-7)

## ஆட்டோ அன்பளிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புளியங்கூடல் இந்தன் பிள்ளையார் ஆலயத்திற்கு இந்து கலாசார அமைச்சினால் ஆட்டோ ஒன்று வழங்கப்பட்டுள்ளது (உ-75)

## இலங்கை -இந்திய கப்பல் சேவை 16ல் ஆரம்பம்

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான கப்பல் சேவை இம்மாதம் 16ஆந் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இச் சேவையில் சிற்றி ஒவ்றிங்கோ கப்பல் ஈடுபடுத்தப் படவுள்ளது.

இதேவேளை, இக்கப்பல் சேவை குறித்த இறுதி ஒப்பந்தத்தில் இரு நாடுகளினதும் கப்பல்துறை அமைச்சர்கள் கைச்சாத்திட்டுள்ளனர். (உ-8)

## மாதா சுருவம் திருட்டு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கரம்பன் கிழக்கு தனுவில் சந்தான மாதா ஆலயத்தின் மாபிளால் ஆன பிரதான மாதா சுருவம் கடந்த திங்கள் முதல் காணாமல் போயுள்ளது.

இவ் ஆலயத்தில் ஏற்கனவே வேறோர் மாதா சுருவம் காணாமல் போயிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-75)

## பூநகரி முகாம் வெற்றி கொண்ட விழா நாளை

(கிளிநொச்சி)

பூநகரி இராணுவ முகாமினை தாக்கியழித்த வெற்றி விழா நாளை திங்கட்கிழமை வன்னிப் பெருநிலப் பரப்பில் கொண்டாடப்படவுள்ளது.

கடந்த 1993 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் சட்டுப்பாட்டில் இருந்த இம் முகாமை விடுதலைப் புலிகள் தவளைப்பாய்ச்சல் இராணுவ நடவடிக்கையில் கைப்பற்றியமை குறிப்பிடத் தக்கது. (உ-10)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

தீவக லயன்ஸ் கழக ஏற்பாட்டில் இன்று காலை9.00 மணிமுதல் புளியங் கூடல் நடராஜா மகாவித்தியாலயத்தில் இலவச மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது;

இதில் எல்லாவித நோய்களும் பரிசோதனை செய்யப்பட்டு இலவச மருந்துகள் வழங்கப்படுவதுடன் மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளதாக தீவக லயன்ஸ் கழகத் தலைவர் ப. தேவநாயகம் தெரிவித்தார். (உ)

---

ஈழத்தமிழர்கள் 40 ஆண்டு காலமாக தயார்ப்படுத்தப் பட்டுள்ளனர். இலங்கையில் அவர்கள் இன்று நிம்மதியாக வாழ முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

---

பேச்சுகளின் ஆதரவை பெற்றுக் கொள்வதில் தங்கி இருக்கிறது என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

மத்தியவங்கி குண்டுத் தாக்குதலுக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனுக்கு மேல் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புக் குறித்து கருத்து வெளியிடுகையில்;

பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பான உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்னர்,

யுத்தக் குற்றச் செயல்களையும், மனித உரிமை மீறல்களை மேற்கொண்டமைக்கான பொறுப்புக்களை இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என சமாதான பேரவை வலியுறுத்தி கூறியுள்ளது; (உ-8)

# ஆர்ப்பாட்டக்காரரை கட்டுப்படுத்தவே

# அதிரடிப்படை துப்பாக்கியைப் பிரயோகித்தது

## விசாரணை அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

அம்பாறை காஞ்சிரங்குடா படுகொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வந்த விசாரணைக்குழு தமது விசாரணை அறிக்கையை உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவிடம் நேற்று முன்தினம் சமர்ப்பித்துள்ளது.

ஓய்வு பெற்ற விமானப் படைத் தளபதி ஹரி குணதிலக தலைமையிலான மூன்று பேர் கொண்ட குழு இந்த விசாரணையை மேற் கொண்டது.

இதேவேளை ஹரி குணதிலகவினால் சமர்ப்பிக்கப்பட்ட இவ் விசாரணை அறிக்கை தொடர்பாக கருத்து முரண்பாட்டைக் கொண்டிருந்த இக் குழுவின் உறுப்பினரான எஸ். விவேகானந்தன் அவ் விசாரணைஅறிக்கையில் ஒப்பமிடவில்லை.

அத்துடன் அவ் விசாரணை அறிக்கைக்குப் புறம்பாக தமது அறிக்கையினை உள்துறை அமைச்சரிடம் சமர்ப்பித்தார்;

விசாரணை அறிக்கைகள் உள்துறை அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் செய்தியாளர் மாநாடு ஒன்று நடைபெற்றது.

இச் செய்தியாளர் மாநாட்டில் தமது விசாரணை அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் குறித்து ஹரி குணதிலக தெரிவிக்கையில்;

தமிழீழ விடுதலைப் புலிகளின் பொத்துவில் பிரதேசப் பொறுப்பாளர் விஸ்வநாதன் உழவு இயந்திரத்தை அதிரடிப் படையினர் சோதனையிட முற்பட்டமை தொடர்பாக தமது தலைமைக்கு தவறாக அறிவுறுத்தியிருந்தார் அத்துடன் ஆட்களைத் திரட்டி குழப்பம் விளைவிக்க காரணமாகியுள்ளார் என தெரிவித்தார்.

இடையில் குறுக்கிட்ட பத்திரிகையாளர் ஒருவர் அப்படியாயின் அதிரடிப் படையினர் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தை அங்கீகரிக்கிறீர்களா என கேள்வியெழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த குணதிலக ஆர்ப்பாட்டக்காரர்கள் கட்டுக் கடங்காமல் முகாமைத் தாக்கியதால் அதிரடிப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்தது என்றார். எனினும், துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளாமல் இருக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தால் வீணான உயிழப்புக்களைத் தவிர்த்திருகக முடியும் என்றும் கூறினார்.

இச் சந்தர்ப்பத்தில் ஹரி குணதிலகவின் விசாரணை அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட 17 விடயங்கள் தொடர்பாக குழுவில் மற்றைய உறுப்பினர் விவேகானந்தன் அதிருப்தி தெரிவித்தார்.

அத்துடன், பொதுமக்களைக் கலைப்பதற்கு அதிரடிப்படையினர் காலாவதியான கண்ணீர்ப் புகைக் குண்டையேபாவித்ததாகவும்: அவர் தமது அறிக்கையில் சுட்டிக் காட்டினார். இதனை குழுவின் தலைவர் ஹரி குணதிலக ஏற்றுக் கொண்டார்.

அதேவேளை விசேட அதிரடிப் படையினரை வெறுமனே இடம் மாற்றுவதால் குற்றவாளிகள் தப்ப வழி ஏற்படும் என்றும் அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டனை வழங்க வேண்டும் என்றும் விவேகானந்தன் கூறினார்:

இவ்வறான அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் பொருட்டு பிரதேச ரீதியாக சமாதான செயலகத்தை நிறுவுவது தொடர்பாக விசாரணைக் குழுவினர் ஒருமித்த கருத்தைக் கொண்டிருந்தனர்:

இந்த விசாரணை அறிக்கைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க எந்தத் தரப்பினர் மீது குற்றம் சுமத்துவது என்பதை விடுத்து எதிர் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நிகழாமல் இருக்க நடவடிக்கை எடுப்பதே முக்கியமானது என்று தெரிவித்தார்.

கடந்த மாதம் 9ஆம் திகதி காஞ்சிரங்குடா அதிரடிப் படையினர் பொதுமக்கள் மீது மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 8 பொதுமக்கள் உயிரிழந்தமை தெரிந்ததே. (த)

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு இரண்டாயிரத்து ஐந்நூறுபேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதிக்கடன் திட்டத்தின் கீழ் கடன் கொடுத்தவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட 2ஆயிரத்து 500பேரின் கடன், இம்மாதம் 21ஆம் திகதியில் இருந்து 24ஆம் திகதி வரை தமிழீழ நிதித்துறையினால் மீளளிக்கப்படவுள்ளதாக நிதிபொறுப்பாளர் யோ. தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார். மீளளிப்பு நடைமுறைகள் வருமாறு,

1. அ) மீளளிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிற் கடன் சான்றிதழை வைத்திருப்பவர்களுக்கான மீளளிப்பு முதற்கட்டமாக நடைபெறும். நேரமும் மீளளிக்கப்படும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும்.
   ஆ) கடன் சான்றிதழைத் தவறவிட்டவர்களுக்கான மீளளிப்பு இரண்டாம் கட்டமாக நடைபெறும்.

இது தொடர்பான நடைமுறைகள் பின்னர் அறிவிக்கப்படும். இதனை கருத்திற்கொண்டு எம்முடன் ஒத்துழைக்குமாறு கடன் சான்றிதழைத் தவறவிட்டவர்களை வேண்டுகின்றோம்.

2. கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகைதந்து கடனை மீளப்பெற வேண்டும்.
3. ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இருவரும் வருகைதர வேண்டும்.
4. கடன்சான்றிதழாளர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களைப் பின்னுரித்தாளர் கொண்டு வர வேண்டும்.
   அ) இறப்புச்சான்றிதழ்
   ஆ) இறப்புச்சான்றிதழின் படி (பிரதி)
   இ) கடன் சான்றிதழ்
   ஈ) பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்
   உ) பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம்.
5. கடன் சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்தி கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.
6. அ) மீளளிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் சான்றிதழாளா தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெற முடியும்.
   ஆ) அடையாள ஆவணம் அற்றவர் தமது புகைப்படத்தை (2.5அங்.x 2.0அங். அளவு) அதன் பின்புறத்தில தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக் கொள்ளப்படும்
   இ) இவ்வாறு செய்ய முடியாதவர்களுக்கான மீளளிப்புக்கடன் சான்றிதழைத் தவறவிட்டவர்களுக்கான இரண்டாம் கட்ட மீளளிப்பின் போது மேற்கொள்ளப்படும்.

இது பற்றிய நடைமுறை பின்னர் அறிவிக்கப்படும்.

பிரதேசரீதியாக மீளளிப்புக்குத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்கள் வருமாறு.

## நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு

| | |
|---|---|
| யா/ந/4 | செல்லத்துரை யோசப் குணரத்தினம் |
| யா/ந/21 | செல்லத்துரை மகேஸ்வரன் |
| யா/ந/25 | முத்தையா மாணிக்கவாசகர் |
| யா/ந/33 | திருமதி ஈஸ்வரி பத்மநாதன் |
| யா/ந/40 | நாகரத்தினம் செல்வரத்தினம் |
| யா/ந/41 | கந்தசாமி சுரேஸ்குமார் |
| யா/ந/48 | செல்லப்பா சண்முகநாதன் |
| யா/ந/53 | திருமதி சத்தியவதி சேனாதிராசஜா |
| யா/ந/72 | திருமதி விமலா பாலசுந்தரம் |
| யா/ந/87 | திருமதி செல்வரஞ்சிதம் கிருஷ்ணகுமார் |
| யா/ந/103 | திருமதி நல்லம்மா கணபதிப்பிள்ளை |
| யா/ந/107 | வேலாயுதர் குணநாயகம் |
| யா/ந/139 | சுப்பையா சண்முகநாதன் |
| யா/ந/234 | திருமதி யோகராணி கனகசபாபதி |
| யா/ந/263 | திருமதி பத்மலீலாவதி இராமசாமி |
| யா/ந/264 | வல்லிபுரம் பரமசாமி |
| யா/ந/310 | பாலசுந்தரம் பாலமோகன் |
| யா/ந/363 | கந்தப்பிள்ளை பூபாலசிங்கம் |
| யா/ந/373 | இரத்தினம் பரமேஸ்வரன் |
| யா/ந/381 | இராசையா பாலகிருஸ்ணன் |
| யா/ந/387 | குட்டித்தம்பி இரத்தினசிங்கம் |
| யா/ந/391 | வேலாயுதபிள்ளை ரவிமோகன் |
| யா/ந/400 | கந்தையா இராமநாதன் |
| யா/ந/407 | செல்லையா சபாரத்தினம் |
| யா/ந/435 | கந்தையா சோதிநாதன் |
| யா/ந/445 | ஐயாத்துரை துரைசிங்கம் |
| யா/ந/447 | ஆசைப்பிள்ளை துரைராசா |
| யா/ந/464 | திருமதி யோகராணி தர்மலிங்கம் |
| யா/ந/482 | அப்பாத்துரை குணபாலசிங்கம் |
| யா/ந/506 | சுப்பையா பத்மசிகாமணி |
| யா/ந/526 | திருமதி சத்தியகுமாரி பற்குணநாதன் |
| யா/ந/546 | சின்னையா திருச்செல்வம் |
| யா/ந/578 | சபாபதிப்பிள்ளை கனகரத்தினம் |
| யா/ந/580 | சண்முகக்குருக்கள் சாம்பசிவசர்மா |
| யா/ந/581 | திருமதி கௌசலாதேவி சிவசுப்பிரமணியம் |
| யா/ந/604 | திருமதி சறோஜினிதேவி பொன்னுத்துரை |
| யா/ந/659 | செல்லப்பா அமிர்தலிங்கம் |
| யா/ந/670 | திருமதி ரஞ்சினி ஜம்புநாதன் |
| யா/ந/707 | நாகமுத்து குணரத்தினம் |
| யா/ந/721 | சிவபூதம் மகேஸ்வரன் |
| யா/ந/787 | திருமதி பாக்கியரத்தினம் துரைசிங்கம் |
| யா/ந/796 | சபாபதிப்பிள்ளை இராசரத்தினம் |
| யா/ந/824 | நடராசா சுந்தரம்பிள்ளை |
| யா/ந/841 | சிவகுருநாதன் சண்முகநாதன் |
| யா/ந/844 | தியாகராசா சிவேந்திரன் |
| யா/ந/857 | திருமதி செல்வநாயகி கந்தசாமி |
| யா/ந/862 | துரைச்சுவாமி சீனிவாசகம் |
| யா/ந/871 | மாணிக்கம் தில்லைநாதன் |
| யா/ந/887 | திருமதி யோகரஞ்சினி தனநிரூபசிங்கம் |
| யா/ந/890 | கனகரட்ணம் தனபாலசிங்கம் |
| யா/ந/892 | கணபதிப்பிள்ளை தியாகராசா |
| யா/ந/905 | பொன்னுத்துரை விஜயேந்திரா |
| யா/ந/915 | திருமதி அன்னைபூரணம் தில்லைநாதன் |
| யா/ந/957 | பொன்னுத்துரை கந்தசாமி |
| யா/ந/960 | வேலுப்பிள்ளை கந்தசாமி |
| யா/ந/961 | மயில்வாகனம் சிவகுரு கந்தசாமி |
| யா/ந/970 | மாணிக்கம் பரமநாதன் |
| யா/ந/1014 | திருமதி புலனேஸ்வரி தங்கராஜா |
| யா/ந/1074 | முருகேசபிள்ளை சந்திரசேகரம் |
| யா/ந/1133 | நாகரத்தினம் பாலசிங்கம் |
| யா/ந/1227 | இராமு சின்னராசா |
| யா/ந/1240 | திருமதி சரஸ்வதி ஞானகோபாலன் |
| யா/ந/1281 | வைத்திலிங்கம் திருச்செல்வம் |
| யா/ந/1299 | திருமதி வசந்தா திருஞானசம்பந்தர் |
| யா/ந/1313 | சின்னத்துரை குகமூர்த்தி |
| யா/ந/1382 | தம்பையா நாகலிங்கம் |
| யா/ந/1421 | பொன்னுத்துரை சண்முகநாதன் |
| யா/ந/1448 | விஸ்வலிங்கம் கணேசன் |
| யா/ந/1488 | சின்னையா விஸ்வநாதன் |
| யா/ந/1514 | தியாகராசா மார்க்கண்டு |
| யா/ந/1555 | வீரசிங்கம் யோகரத்தினம் |
| யா/ந/1564 | இரத்தினம் அருளானந்தம் |
| யா/ந/1593 | இரத்தினசபாபதி கமலநாதன் |
| யா/ந/1643 | திருமதி பொன்னம்மா இராசையா |
| யா/ந/1647 | வைத்தியலிங்கம் சிவசம்பு பத்மநாதன் |
| யா/ந/1789 | திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு |
| யா/ந/1832 | இராஜரட்ணம் தயாநிதி |
| யா/ந/1867 | திருமதி இந்திராதேவி கனகசபை |
| யா/ந/1948 | சுப்பையா நவரத்தினம் |
| யா/ந/2120 | கணபதிப்பிள்ளை சின்னையா ஆறுமுகம் |
| யா/ந/2180 | சின்னையா கனகசபை |
| யா/ந/2275 | சுப்பிரமணியம் இராமநாதபிள்ளை |
| யா/ந/2315 | நடராசா சற்குணலிங்கம் |
| யா/ந/2379 | திருமதி சிவபாக்கியம் இராசநாயகம் |
| யா/ந/2397 | குமாரசாமி யோகேந்திரா |
| யா/ந/2409 | கதிர்காமதேவி சுப்பிரமணியம் |
| யா/ந/2469 | குமாரசாமி பாலசிங்கம் |
| யா/ந/2584 | திருமதி சிவகுமாரி ஜெகதீசன் |
| யா/ந/2594 | திருமதி கமலாதேவி சோமசுந்தரம் |
| யா/ந/2674 | விசுவலிங்கம் இரத்தினசபாபதி |
| யா/ந/2712 | திருமதி சாந்தகுமாரி சுந்தரானந்தா |
| யா/ந/2824 | இரத்தினம் கமலதாஸ் |
| யா/ந/2844 | திருமதி லோகராணி கிஸ்ணதாஸ் |
| யா/ந/2873 | செல்லையா நடராசா |
| யா/ந/3055 | ஆறுமுகம் அமிர்தாயான்சிவம் |
| யா/ந/3111 | திருமதி கனகம்மா சோமசுந்தரம் |
| யா/ந/3119 | செல்லத்துரை கோபாலகிருஷ்ணன் |
| யா/ந/3133 | திருமதி மகேந்திரராணி இராஜரட்ணம் |
| யா/ந/3136 | திருமதி மனோன்மணி சபாரத்தினம் |
| யா/ந/3164 | திருமதி நல்லம்மா சுப்பிரமணியம் |
| யா/ந/3203 | சின்னையா பத்மநாதன் |
| யா/ந/3210 | திருமதி இரத்தினேஸ்வரி ரகுநாதன் |
| யா/ந/3217 | திருமதி இராஜலட்சுமி ஆறுமுகம் |
| யா/ந/3220 | செல்லத்துரை இரத்தினகுமார் |
| யா/ந/3287 | சுதர்ஷினி இரத்தினசிங்கம் |
| யா/ந/3299 | திருமதி. விமலாதேவி சிவசுப்பிரமணியம் |
| யா/ந/3348 | சின்னக்குட்டி தேவராஜா |
| யா/ந/3400 | நாகமுத்து நமச்சிவாயஇடைக்காடர் |
| யா/ந/3408 | திருமதி. ரஞ்சினிதேவி ஜெயந்திரன் |
| யா/ந/3427 | சோமசுந்தரம் சரவணபவான் |
| யா/ந/3445 | திருமதி. கமலராணி பூபாலராஜா |
| யா/ந/3464 | மாணிக்கம் இராசலிங்கம் |
| யா/ந/3480 | நன்னித்தம்பி இரத்தினசிங்கம் |
| யா/ந/3481 | வல்லிபுரம் நடராசா |
| யா/ந/3483 | திருமதி. கமலாதேவி புவனசுந்தரராஜா |
| யா/ந/3514 | தாமோதரம்பிள்ளை திருநாவுக்கரசு |
| யா/ந/3569 | திருமதி அனற்வசந்தநிபிறின்ஸ் சந்திரகுமார் பெஞ்சமின் |
| யா/ந/3573 | திருமதி கலாராணி ஸ்ரீஸ்கந்தராசா |
| யா/ந/3660 | கந்தையா சுப்பிரமணியம் |
| யா/ந/3677 | இராமலிங்கம் அரசலிங்கம் |
| யா/ந/3755 | திருமதி ஜானகி பஞ்சாட்சரன் |
| யா/ந/3764 | பொன்னம்பலம் இராசநாயகம் |
| யா/ந/3797 | விநாயகமூர்த்தி இராஜரட்ணம் |
| யா/ந/3798 | இராசையா பாலசிங்கம் |
| யா/ந/3815 | திருமதி சொர்ணபாக்கியம் சபாரத்தினம் |
| யா/ந/3828 | அம்பலவாணர் கந்தையா |
| யா/ந/3835 | திருமதி கௌசலாதேவி சந்திரசேகரம் |
| யா/ந/3862 | சின்னத்துரை பூபாலசிங்கம் |
| யா/ந/3869 | உமாமகேஸ்வரி வேலாயுதம் |
| யா/ந/3886 | கந்தையா சோமசுந்தரம் |
| யா/ந/3957 | தம்பு சுரேந்திரன் |
| யா/ந/4018 | திருமதி ஜெயலட்சுமி சண்முகநாதன் |
| யா/ந/4071 | றஞ்சினிதேவி சுந்தரம் |
| யா/ந/4101 | சசிகலா பரமலிங்கம் |
| யா/ந/4110 | திருமதி பத்மாதேவி கந்தமூர்த்தி |
| யா/ந/4145 | திருமதி தங்கமலர் மயில்வாகனம் |
| யா/ந/4190 | திருமதி விஜயலட்சுமி செல்வராஜா |
| யா/ந/4200 | அனுஜா சோதிராஜா |
| யா/ந/4209 | திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு |
| யா/ந/4280 | திருமதி செல்லம்மா வேலாயுதம் |
| யா/ந/4323 | வைத்திலிங்கம் வீரசெல்லையா |
| யா/ந/4325 | முத்துக்குமாரசாமி இராஜேந்திரன் |
| யா/ந/4365 | அருணகிரிநாதன் மணிவண்ணன் |
| யா/ந/4381 | திருமதி புவனம் செல்வநாயகம் |
| யா/ந/4507 | திருமதி ரதி சந்திரநாதன் |
| யா/ந/4548 | முருகேசு ஐயாத்துரை |
| யா/ந/4551 | திருமதி சிவயோகம் சோமசுந்தரம் |
| யா/ந/4558 | குணரத்தினம் கணேசலிங்கம் |
| யா/ந/4581 | திருமதி நிர்மலா பாலசுந்தரம் |
| யா/ந/4587 | திருமதி தவயோகசிந்தாமணி தியாகராசா |
| யா/ந/4605 | திருமதி பாலேஸ்வரி கனகசபாபதி |
| யா/ந/4625 | நாகரட்ணம் பத்மநாதன் |
| யா/ந/4652 | நரசிங்கம் சிவன் |
| யா/ந/4725 | திருமதி இராசமலர் கன்கரட்ணம் |
| யா/ந/4745 | தியாகினி தியாகராஜா |
| யா/ந/4795 | திருமதி மகாலட்சுமி வசந்தகுமார் |
| யா/ந/4849 | நித்தியபாக்கியம் கோவிந்தபிள்ளை |
| யா/ந/4851 | முத்துத்தம்பி சபாநாதன் |
| யா/ந/4874 | அனுசா குணரட்ணம் |
| யா/ந/4656 | ஜெகசீதா இரத்தினம் |
| யா/ந/5010 | திருஞானசம்பந்தன் நாகலிங்கம் |
| யா/ந/5034 | முருகேசு சண்முகநாதன் |
| யா/ந/5055 | திருமதி பத்மாவதி செல்வநாயகம் |
| யா/ந/5122 | திருமதி இந்திராணி செல்வரத்தினம் |
| யா/ந/5162 | சுந்தரம் சுந்தரலிங்கம் |
| யா/ந/5178 | பொன்னர் தம்பிஐயா |
| யா/ந/5198 | இராசரெட்ணம் மோகனராசா |
| யா/ந/5199 | சரவணமுத்து சண்முகநாதன் |
| யா/ந/5244 | கிருபா இராமநாதன் |
| யா/ந/5302 | திருமதி கனகேஸ்வரி பாலசுப்பிரமணியம் |
| யா/ந/5319 | நடராசா இராசலிங்கம் |
| யா/ந/5331 | இளையதம்பி சந்திரன் |
| யா/ந/5334 | கணபதிப்பிள்ளை சிவகுமாரன் |
| யா/ந/5428 | கந்தையா சிவசம்பு |
| யா/ந/5429 | கனகரத்தினம் சந்திரரத்தினம் |
| யா/ந/5468 | தியாகராசா நவநீதன் |
| யா/ந/5484 | செல்லத்துரை விவேகானந்தா |
| யா/ந/5515 | சாந்தா சரவணமுத்து |
| யா/ந/5536 | திருமதி தேவிகாராணி வீரசிங்கம் |
| யா/ந/5569 | திருமதி கருணாதேவி கோபால் |
| யா/ந/5600 | திருமதி செல்வராணி மகாலிங்கம் |
| யா/ந/5605 | திருமதி அருளாம்பிகை பத்மசிறீறெங்கன் |
| யா/ந/5646 | திருமதி கமலாவதி செல்வர்த்தினம் |
| யா/ந/5649 | சிவசம்பு கணேசன் |
| யா/ந/5700 | முருகேசு சுந்தரலிங்கம் |
| யா/ந/5731 | கணபதிப்பிள்ளை யோகேந்திரன் |
| யா/ந/5751 | திருமதி ராஜேஸ்வரி சிறீஸ்காந்தன் |
| யா/ந/5753 | வசந்தகுமாரி தம்பையா |
| யா/ந/5765 | திருமதி சறோஜினிதேவி பன்னீர்ச்செல்வம் |
| யா/ந/5814 | வேலுப்பிள்ளை மகேஸ்வரன் |
| யா/ந/5877 | திருமதி நல்லபிள்ளை சரவணமுத்து |
| யா/ந/5951 | திருமதி யோகம்மா கந்தையா |
| யா/ந/5960 | மாணிக்கம் ஐயன்னா |

## காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு

| | |
|---|---|
| யா/கா/1 | கணேசபிள்ளை துரைராஜசிங்கம் |
| யா/கா/13 | திருமதி.இராஜராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் |
| யா/கா/26 | கதிரவேலு சோமசுந்தரம் |
| யா/கா/29 | திருமதி. கனகம்மா அம்பலம் |
| யா/கா/33 | வேலுப்பிள்ளை பரம்சோதி |
| யா/கா/34 | செல்லத்துரை கோபாலன் |
| யா/கா/35 | திருமதி.அன்னபூரணம் மகேந்திரராசா |
| யா/கா/45 | திருமதி.பரமேஸ்வரி கந்தையா |
| யா/கா/52 | அம்பலவாணர் திருச்சிற்றம்பலம் |
| யா/கா/53 | நல்லதம்பி நடராசா |
| யா/கா/79 | செல்லத்துரை சிவபாலன் |
| யா/கா/91 | வேலுப்பிள்ளை இராமலிங்கம் |
| யா/கா/92 | ஆறுமுகம் ஜெகநாதன் |
| யா/கா/127 | திருமதி.இரத்தினம் பகவற்சிங்கம் |
| யா/கா/154 | சண்முகம் பாலசுப்பிரமணியம் |
| யா/கா/166 | முருகேசு சிதம்பரப்பிள்ளை |
| யா/கா/189 | திருமதி.சத்தியதேவி சிவஞானம் |
| யா/கா/195 | தில்லையம்பலம் திருநாவுக்கரசு |
| யா/கா/204 | திருமதி.சிவமணி சிவசுப்பிரமணியம் |
| யா/கா/253 | நற்குணசேகரம் பரராசசேகரம் |
| யா/கா/272 | வரப்பிரகாசம்பெஞ்சமின் |
| யா/கா/292 | திருமதி கமலாம்பிகை கந்தசாமி |
| யா/கா/312 | ஆறுமுகம் மார்க்கண்டு |
| யா/கா/327 | சுந்தரம்பிள்ளை ஆறுமுகம் |
| யா/கா/356 | சண்முகம் சிவகுமார் |
| யா/கா/390 | திருமதி.நேசம்மா நடராஜா |
| யா/கா/403 | திருநாவுக்கரசு கோபாலபிள்ளை |
| யா/கா/415 | திருமதி.லலிதா லோகநாதன் |
| யா/கா/425 | பரஞ்சோதி நந்தகுமார் |
| யா/கா/484 | திருமதி.புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை |
| யா/கா/528 | திருமதி.கனகம்மா சுப்பிரமணியம் |
| யா/கா/532 | சுப்பையா பொன்னத்துரை |
| யா/கா/592 | திருமதி.வள்ளியம்மை அருணாசலம் |
| யா/கா/614 | ஆறுமுகம் பரமேஸ்வரன் |
| யா/கா/664 | திருமதி பரமேஸ்வரி பரமநாதன் |
| யா/கா/689 | அம்பலவரணர் சுப்பிரமணியம் |
| யா/கா/714 | இரத்தினசேதுகாவலன் அம்பிகைபாகன் |
| யா/கா/729 | அம்பலவாணா வேலுப்பிள்ளை பொன்னம்பலம் |
| யா/கா/741 | கந்தசாமி சண்முகம்பிள்ளை |
| யா/கா/751 | ஆண்டி உமாதேவன் |
| யா/கா/753 | கந்தையா லகுகுமார் |
| யா/கா/759 | திருமதி.செல்லம்மா வினாசித்தம்பி |
| யா/கா/828 | திருமதி.பரமேஸ்வரி சிறீஸ்கந்தராசா |
| யா/கா/872 | திருமதி.கிருபைமலர் குலசேகரம் |
| யா/கா/884 | திருமதி.சிவமணி நாகராசா |
| யா/கா/895 | திருமதி.சுந்தரம்மா வைத்திலிங்கம் |
| யா/கா/896 | சிதம்பரப்பிள்ளை கந்தசாமி |
| யா/கா/900 | திருமதி.ரஞ்சிதமலர் சபாநாதன் |
| யா/கா/908 | அரியகுட்டி செல்வரத்தினம் |
| யா/கா/914 | கந்தையா குணரத்தினம் |
| யா/கா/918 | திருமதி சந்திரகாந்தா குகநாதன் |
| யா/கா/923 | வேலுப்பிள்ளை சோமசுந்தரம் |
| யா/கா/954 | சிவகடாட்சக்குருக்கள் ஞானசேகர ரகுநாதசர்மா |
| யா/கா/969 | திருமதி.சத்தியபாமா ரங்கநாதன் |
| யா/கா/983 | சண்முகம் பத்மநாதன் |
| யா/கா/1000 | திருமதி.தங்கம்மா தம்பையா |

## தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவு

| | |
|---|---|
| யா/தெ/5 | திருமதி நிர்மலா பொன்னப்பா |
| யா/தெ/7 | சீவரத்தினம் பாலச்சந்திரன் |
| யா/தெ/10 | ரஞ்சினி சுப்பிரமணியம் |
| யா/தெ/11 | சாந்தி சபேஸ்வரன் |
| யா/தெ/12 | திருமதி.ராஜேஸ்வரி சிவபாதம் |
| யா/தெ/13 | வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம் |
| யா/தெ/27 | காசிப்பிள்ளை கந்தையா |
| யா/தெ/35 | திருமதி.விசாலாட்சி கந்தையா |
| யா/தெ/38 | செல்லையா வேலாயுதபிள்ளை |
| யா/தெ/83 | சின்னத்தம்பி பத்மநாதன் |
| யா/தெ/90 | யசிதா தனபாலசிங்கம் |
| யா/தெ/94 | மதிவதனா செல்லத்துரை |
| யா/தெ/113 | திருமதி. இரத்தினபூபதி நடராசா |
| யா/தெ/139 | திருமதி.பவுலீனா யோகரட்ணம் மரியதாசன் |
| யா/தெ/186 | திருமதி.இராசாத்தியம்மா அருளப்பு |
| யா/தெ/218 | சூரியகுமாரி குமரையா. |
| யா/தெ/221 | கணபதிப்பிள்ளை தம்பிராசா |
| யா/தெ/242 | செல்லையா பூலோகேந்திரன் |
| யா/தெ/283 | குருநாதபிள்ளைஆறுமுகம் |
| யா/தெ/309 | திருமதி.கண்மணி சிவசுப்பிரமணியம் |
| யா/தெ/355 | செல்லர் சின்னத்துரை |
| யா/தெ/376 | திருமதி.ஜெகசோதி கருணாகரன் |
| யா/தெ/387 | குமரகுரு சசீதரன் |
| யா/தெ/411 | கந்தையா தவராஜசிங்கம் |
| யா/தெ/427 | திருமதி.வள்ளியம்மை வேலாயுதம் |
| யா/தெ/436 | திருமதி.தேவகி பூபாலசிங்கம் |
| யா/தெ/437 | சரோஜினி சுப்பிரமணியம் |
| யா/தெ/449 | தில்லையம்பலம் மார்க்கண்டு |
| யா/தெ/458 | உமைபாலகி சுப்பிரமணியம் |

# கஷ்டப் பிரதேசத்தில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு

(கொழும்பு)

பின் தங்கிய பகுதிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது என கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் ரி.பி. ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; இது தொடர்பான சுற்றறிக்கையொன்று சகல கல்வித் திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுளளது எனவும் தெரிவித்துள்ளார்.

ஆசிரிய சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள் கட்டாயமாக 3 வருடகாலத்துக்கு கஷ்டப் பிரதேசங்களில் கல்வி கற்பிக்கவேண்டும்.

ஆனால், ஆசிரியர்களில் பெரும்பாலானோர் பல்வேறு காரணங்களை காட்டி இப் பிரதேசங்களில் இருந்து இடமாற்றம்பெற்று விடுகின்றனர் எனவும்சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு பற்றி குறிப்பிடப்படவில்லை என்பது தெரிந்ததே. (உ-8)

# இன்று ஒரு தகவல்

## ராகங்கள் பலவிதம்

'பாடப்பாட ராகம்' என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள். 'பாடப்பாட வேகம் என்றுகூட ஒரு புது மொழி சொல்லலாம். அதாவது. ஒருவர் பாடப்பாட இன்னொருவருக்கு ஓடவேண்டும் என்கிற வேகம் அதிகமாகிக் கொண்டேயிருக்கும். அதுதான்பாடப்பாட வேகம். சங்கீதத்திலே சங்கதிகள் உண்டு. சங்கீதத்தைப் பற்றிய சங்கதிகளும் நிறைய உண்டு 'சரிகமபதநி' என்ற ஏழு ஸ்வரத்திலே எத்தனையோ ராகங்கள்! எந்த ராகத்தை எப்போது பாடவேண்டும்? எந்தப் பாட்டை எந்த ராகத்தில் பாடவேண்டும்? என்றெல்லாம் சில முறைகளை வகுத்து வைத்திருக்கிறார்கள்.

இடத்துக்குத் தகுந்த ராகம் உண்டு, செய்யுளுக்குத் தகுந்த ராகம் உண்டு, குணத்துக்குத் தகுந்த ராகம் உண்டு, காலத்துக்குத் தகுந்த ராகம் உண்டு. இடத்துக்குத் தகுந்த ராகம் என்றால்-அது ஐந்திணை ராகம்? குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என ஐந்துவகை நிலங்கள் இருக்கின்றனவல்லவா? அது அதற்குப் பொருத்தமான ராகம் இருக்கின்றது குறிஞ்சி - பாலை - சாதாரி, செவ்வழி - மருதம் என்றவாறு.

செய்யுளுக்கு தகுந்த ராகம் என்றால் அது எப்படி தெரியுமா? வெண்பாவுக்கு-சங்கராபரணம், ஆசிரியப்பாவுக்கு-தோடி, கலிப்பாவுக்கு-பந்துவராளி, கலித்துறைக்கு-பைரவி, தாழிசைக்கு-தோடி, விருத்தப்பாவுக்கு-கல்யாணி, காம்போதி, மத்தியமாவதி, உலாச் செய்யுளுக்கு-சௌராஷ்டிரம், பிள்ளைத்தமிழுக்கு - கேதாரகௌளம், பரணிக்கு-கண்டாரவம்.

குணத்துக்குத் தகுந்தராகம் என்பன; இரக்கத்துக்கு-நீலாம்பரி, புன்னாகவராளி, ஆகரி, கண்டாரவம், பியாகடம்; துக்கத்துக்கு-இதே இரக்க ராகங்களோடு வராளியையும் சேர்த்துக்கொள்ளலாம் மகிழ்ச்சிக்கு- காம்போதி, சாவேரி, தன்யாஸி, யுத்தத்துக்கு ராகம்-நாட்டை.

காலத்துக்குத் தகுந்தராகங்கள் என்று சொன்னால் வசந்த கால ராகங்கள் -வசந்தா, காம்போதி, அசாவேரி. தன்யாஸி மாலை வேளை ராகம்-கல்யாணி, காபி, கன்னடம் காம்போதி; யாம வேளை ராகம்-ஆகரி; விடியற் காலை-ராகம்-இந்தோளம், நாட்டை பூபாளம். உச்சி வேளைராகம் சாரங்கம், தேசாட்சரி, எல்லாக் காலங்களுக்கும் பொதுவான ராகங்கள் உண்டு. அதாவது-ஆகரி, இந்தோளம் இராமகிரி, சாரங்கம், பூபாளம் போன்றவைகள் நீங்கலாக மற்ற ராகங்கள் எல்லாக் காலத்துக்கும் பொருந்தும்.

இன்னொரு விஷயம் தெரியுமா? ராகங்களிலேயே ஆண் ராகம்-பெண் ராகம் எல்லாம் உண்டு. ஒருவனுக்கு ஒருத்தி என்கின்ற கட்டுப் பாடுகள் அவைகளுக்குக் கிடையாது இப்போது உதாரணத்துக்குப் பைரவியை எடுத்துக் கொள்ளுங்கள். இது ஆண்ராகம். தேவக்ரியை- மேகவி ரஞ்சி-குறிஞ்சி இவைகள் எல்லாம் பெண் ராகங்கள். இவைகள் பைரவியின் மனைவிகள் இந்த ராகங்களுக்கு அதிதேவதை ஈசன் 'சீராகம்' என்பது ஆண் ராகம், இந்தோளம், பல்லவி சாவேரி ஆகியவைகள் அதனுடைய சம்சாரங்கள். இவைகளுக்கு அதிதேவதை சரஸ்வதி இப்படி நிறைய தம்பதிகள் இருக்கிறார்கள்.

இவைகளை எதற்குச் சொல்ல ஆரம்பித்தேன் என்றால்; இன்றைக்குத் தகவலில் ஒரு ராகத்தைப்பாடிக் காட்டலாம் என்று ஆசை. எதற்கு எனக்கும் ரிஸ்க் உங்களுக்கும் ரிஸ்க் என்று நினைத்து ராகத்தைப் பற்றிய தகவல்களை மட்டும் சொன்னேன். ■

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## படகுச்சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கடந்த சில மாதங்களாக இடை நிறுத்தப்பட்டிருந்த குமுதினிப் படகுச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (உ)

## மேலதிக நேர கொடுப்பனவு இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நூலகத்தில் பணிபுரியும் ஊழியர்களின் 2002 ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு இது வரை வழங்கப்படவில்லை எனவும்,

இது குறித்து துணைவேந்தருடன் கலந்துரையாடியிருப்பதாகவும் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இடைக்கால நிர்வாகம்

(கிளிநொச்சி)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட கிளை கொழும்பு தலைமைப்பீடத்தால் கலைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஐந்துபேர் கொண்ட இடைக்கால நிர்வாகம் ஒன்றை கிளிநொச்சி அரசாங்க அதிபர் தி. இராசநாயகத்தின் சிபார்சின் பேரில் இலங்கை செஞ்சிலுவைச்சங்க தலைவர் ஜெகத் அபயசிங்க நியமனம் செய்துள்ளார். (உ)

## நாவற்குழி ம. வி. மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி மகா வித்தியாலயத்தினூடாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்கு விண்ணப்பித்து வேறுபாடசாலைகளில் தற்காலிகமாக கல்வி பயிலும் மாணவர்கள் தரம் 10, 11 ம் ஆண்டிற்கான கணிப்பீட்டுப்

## தரம்-9 மாகாண மட்ட பொதுப் பரீட்சை நாளை ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

தரம் 9 மாணவர்களுக்குரிய மாகாண மட்ட பொதுப் பரீட்சை நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான சகல வினாப்பத்திரங்களும் அந்தந்த வலயங்களில் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்கள் சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய பரீட்சையை நடத்துமாறு மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார். (உ-3)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் பாதிப்புற்ற பகுதிகளில் புனரமைப்புப் பணி

(கிளிநொச்சி)

எறிக்கோட்திட்டத்தின்கீழ், கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளில் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டுள்ளது.

யுத்தத்தால் சேதமடைந்த கிணறுகளை புனரமைப்பது, மல கூடங்களை நிறுவுவது, உணவற்ற பொருட்களை வழங்குவது உள்ளிட்ட புனர்வாழ்வுப் பணிகள் மேற்கொள்ள துரித நடவடிக்கை எடுத்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவை சங்க பொருளாளர் டாக்டர் கே.வி.கே. திருலோகமூர்த்தி தெவித்துள்ளார்.

இதற்கென ஒன்பது தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கு அனுராதபுரத்தில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இத் தொண்டர்கள், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இதற்கான சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். (உ)

## உடத்தலவின்ன படுகொலை விசாரணை மேல்நீதிமன்றுக்கு மாற்றம்

(கொழும்பு)

கண்டி உடத்தலவின்ன 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு

ரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இது தொடர்பான பூர்வாங்க வழக்கு விசாரணைகள்

## ஆலோசனைக்குழுக்கூட்டம் கூட்டாமைக்கு கண்டனம்

(கொழும்பு)

போக்குவரத்து நெடுஞ் சாலைகள், உள்நாட்டு

பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ்குணவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார்;

(கொழும்பு)
போக்குவரத்து நெடுஞ் சாலைகள், உள்நாட்டு அமைச்சு ஆகியவற்றின் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டம் இதுவரை கூட்டப்படவில்லை என்று எதிர்க் கட்சியினர் குற்றம்சாட்டியுள்ளனர்.

இக்குழுக் கூட்டப்படாமல் இருப்பது, பாராளுமன்ற சிறப்பு உரிமைகளை மீறும் செயலாகும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ்குணவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பான கூட்டத்தை கூட்டுவதற்கு உத்தர விடுமாறும் அவர் சபாநாயகரை கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர், நிலையியற் சட்டத்தின் கீழ் இது சம்பந்தமாக எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். (உ- 8)

# பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்களை மூட நடவடிக்கை

(கொழும்பு)
பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்களை உடனடியாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கபபடும் என மத்திய மாகாணசபை சுகாதார அமைச்சர் சரலியபண்டார திஸநாயக்கா தெரிவித்துள்ளார.

மத்திய மாகாணசபை பிரதேசத்தில் 29 சிறுவர் இல்லங்களே சட்டபூர்வமாகப பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் இவற்றினை விட பதிவு செய்யபபடாத சிறுவர் இல்லங்கள் பலஇருப்பது தற்போதுகண்டறியப்பட்டுள்ளன.

சட்டபூர்வமில்லாத சிறுவர் இல்லங்கள் தொடர்பாக மிக விரைவில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் சாலிய பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பேராதனையில் உள்ள சிறுவர் பராமரிப்பு இல்லம் ஒன்றில், வெளிநாட்டுப் பெண்மணி ஒருவரின் மேற்பார்வையில் இருந்த 13 வயது சிறுமி குழந்தையை பிரசவித்துள்ளார்.

குறித்த இச்சம்பவத்தையடுத்தே மத்திய மாகாண அமைச்சர் சாலிய பண்டார திஸநாயக்க பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். (உ-8)

பத்து வேறுபாடசாலைகளில் தற்காலிகமாக கல்வி பயிலும் மாணவர்கள் தரம் 10,11 ம் ஆண்டிற்கான கணிப்பீட்டுப் புள்ளிகளை எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பதாக பாடசாலையில் சமர்ப்பிக்குமாறு அதிபர் பி. முத்துலிங்கம் கேட்டுள்ளார். (ந-5)

# கல்விக் கண்காட்சி

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டுஅலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு. மாகாண கல்வித் திணைக்களத்துடன் இணைந்து 'சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்தல்' என்னும் தொனிப்பொருளிலான கல்விக் கண்காட்சியொன்றினை எதிர்வரும் 13,14 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடத்தவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் நிதியத்தின் நிதியுதவியுடனேயே இக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

திருகோணமலையில் உள்ள ஸ்ரீ சண்முக இந்துமகளிர் கல்லூரி, விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், ஆர்.கே.எம் கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, புதிய பிரான்சிஸ் சபேரியர் மகாவித்தியாலயம் ஆகியபாடசாலைகளிலேயே இக் கல்விக் கண்காட்சி நடைபெறவுள்ளது. (உ-8)

முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் இம் முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு உடந்தையாக இருந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தை, மற்றும் அவரது இரு புதல்வர்கள், 11 இராணுவத்தினர் ஆகியோருக்கு எதிராக விசா

இது தொடர்பான பூர்வாங்க வழக்கு விசாரணைகள் அனைத்தும் கண்டி தெல்தெனிய நீதிமன்றத்தில் நீதிவான் இனோக்காறணசிங்க முன்னிலையிலேயே நடைபெற்று முடிவடைந்துள்ளன.

எதிர் வரும் 15 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றில் நடை பெறவுள்ள இவ் வழக்கு விசாரணையின் போது மேற்படி சந்தேக நபர்கள் அனைவரையும் அங்கு ஆஜராகுமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (உ-8)

# பேச்சு முடிவுகள் குறித்து சமாதானப்பேரவை திருப்தி

(கொழும்பு)
அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே அண்மையில் நடைபெற்று முடிந்த முதலாவது சுற்று இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் முடிவுகளை இலங்கை தேசிய சமாதானப் பேரவை வரவேற்றுள்ளது.

சமாதானப் பேச்சு குறித்து அப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில்;

பொருளாதாரம், பாதுகாப்பு, அரசியல் விவகாரங்கள் ஆகியன குறித்து ஆராய்வதற்கு மூன்று கூட்டுக் குழுக்கள் அமைக்கப்படுவது மிகமுக்கியத்துவம் வாய்ந்த விடயம்.

அரசியல் தீர்வு தொடர்பான விடயங்களை தீர்மானிப்பதற்கென மற்றொரு குழு நியமிக்கப்படுவது இப்பேச்சுவார்த்தைகளில் எதிர்பாராத ஒரு முன்னேற்றம் ஆகும்.

இம் முன்னேற்றங்களை மேலும் வலுப்படுத்திச்செல்ல வேண்டுமாயின், இருதரப்பினரும் சமாதான முயற்சிகளின் மீது நம்பிக்கை வைப்பதிலும், தங்களை அர்ப்பணித்துக் கொள்வதிலுமே தங்கி இருக்கிறது.

எவ்வாறாயினும் சமாதான பேச்சுவார்த்தைகள் நீண்டகாலம் நிலைப்பது இருதரப்பினரும் ஏனைய அமைப்பு

(3-ம் பக்கம் பார்க்க)

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து

# சிறந்ததாக வாழ்க்கையைச் சீர்செய்யுங்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

### இராகுவின் பொதுப்பலன்

4, 13, 22, 31, போன்ற தேதியில் பிறந்த அனைவரும் இராகு ஆதிக்கம் உள்ளவர்களே. ஞானகாரன் என்று அழைக்கப்படும் இராகு, சிறந்த அறிவையும் சிந்தனா சக்தியையும், முன் கூட்டியே எதையும் அறியும் ஆற்றலையும் கொடுக்கும். சிறந்தபேச்சாற்றலாலும், பொதுமக்களுக்கு உதவுவதாலும், சாஸ்திரம், விஞ்ஞானம், கணிதம் போன்றவற்றில் செட்டிக்காரராய் இருப்பதாலும், தன் தகுதியை உயர்த்திக் கொள்வர். எப்பொழுதும் சுதந்திரமாய் இருக்கவேண்டும் என்று நினைப்பதால், பிறர்கட்டுப்பாட்டின் கீழ் வாழமாட்டார்கள். எல்லா விஷயங்களையும் சிறிதளவாவது தெரிந்து வைத்திருப்பர். தன்னுடைய கருத்துக்களை எழுத்தாலும் பேச்சாலும் துடுக்காகவெளியிடுவர்.

ஊர்சுற்றும் ஆசைகொண்ட இவர்கள், பல இடங்களைக் கண்டு அனுபவத்தைப்பெற்றிருப்பதால், மற்றவர்கள் இவர்களிடம் யோசனை கேட்பர். பிறர்பேசுவதை முழுதும் கேட்காது மறுத்துப் பேசுவர். முன்கோபியான இவர்கள் வயது ஏற, ஏறத் தன்னைத்திருத்திக் கொண்டு வாழ முற்படுவர். எவ்வளவு சிரமங்கள் வந்தாலும், சிறிது நேரம் கவலைப்பட்டு உடனே அந்தக் கவலையை விரட்டி விடுவர்.

நரம்புச் சக்திகூடிய இவர்கள் ஓரளவு உயரமானவர்களாகவும், பார்ப்பதற்குக் கம்பீரமானவர்களாகவும், சிந்தனாசக்தி உடையவர்களாகவும் இருப்பர். பிறருக்கு உதவும் மனம் கொண்டஇவர்கள் பலர் போற்றும் மனிதராக வாழ்வர். எந்தப்பழக்கத்திற்கும் அடிமையாக இருக்கமாட்டார். ஆனால்சில பழக்கத்தைத்தொட்டு மனக்கட்டுப்பாட்டால் விட்டுவிடுவர். யாரும் தன் கஷ்டத்தை சொல்லி அழுதால் தானும் அவர்களுடன் சேர்ந்து அழுது விடுவர். இவர்களுடைய மூளை மின்னல் வேகத்தில் பதில் கொடுக்கும் தன்மை உடையது.

இவர்களிடம் பல திறமை இருப்பதால் மற்றவர்கள் மதிப்பர். எங்கு சென்றாலும் வரவேற்பு உண்டு. சிரமப்பட்டு பணம் சேர்த்து, குதூகலமாகச் செலவு செய்வர்.

## சோதிட பலன்

பணம் செலவானதும், தனிமையில் வருந்துவர். மனத்துணிவு கொண்ட இவர்களுக்கு உண்மையான நண்பர்கள் என்றும் உண்டு. இவர்களில் ஒன்பது வகையானவர்களை இனிப் பார்ப்போம்.

### உடல் எண்4 கூட்டு எண்ணாகிய உயிர் எண் 1

4, 13, 22, 31 போன்ற தேதியில் பிறந்து தேதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும், கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண்-1 வந்தால் இராகு, சூரியன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவார். பார்ப்பதற்கு ஓரளவு உயரமாகவும், அலை போன்ற முடியுடையவராகவும், எடுப்பான தோற்றமுடையவராகவும் இருப்பர். உஷ்ணமான உடல் அமைப்புக் கொண்டவர்களாதலால், சிலருக்குத் தலைமுடி உதிரும். சிற்றின்பத்தில் அதிக ஆர்வமிருக்கும். ஆனால் முறைகேடான விஷயங்களை வெறுப்பார்.

இவர்களுக்குப் பேசுவதாலும், எழுதுவதாலும் உயர்வு உண்டாகும். இவர்களில் பலருக்கு நல்ல குடும்ப வாழ்க்கை அமைந்து விடுகிறது. தன்மனத்தில் தோன்றுகிற கருத்துக்களை மறைக்காமல் வெளியிடுவர். பிறர் பேசுவதைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்காது குறுக்காகப் பேசுவர். இதை உணர்ந்து திருத்திக் கொள்வது நலம்.

எல்லோருக்கும் உதவும் மனப் பான்மை கொண்ட இவர்களை மற்றவர்கள் மதிப்பர். பலரிடம் நல்ல மனிதன் என்ற பெயரையும், ஒரு சிலரிடம் பொறாமையால் கெட்ட பெயரையும் எடுப்பர். யார் எதைக் கூறினாலும் நம்பாது தீர விசாரித்து ஒரு பிரச்சினையை முடிவெடுக்கும் தன்மை கொண்டவராதலால், இவர்களைக் கண்ட அனைவரும் மரியாதை கொடுப்பர். தான் ஒரு தவறு செய்தாலும் உணர்ந்து திருந்தி விடுவர்.

பிறருக்குத் தீங்கு செய்யாத மனப்பான்மை கொண்ட இவர்கள், நேர்மையைத் தவிர போலிகளை வெறுப்பவராவார். இவர்களின் நட்பைப் பெறப்பலர்முன்வருவர். ஆனால் இவர்களுக்கு ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால் எவ்வித தீங்கும் செய்ய முற்பட்டால், எதிரி தப்பவே முடியாது நல்லபுத்திக்கூர்மை உடையவராதலால் எங்கே சென்றாலும் பலவிஷயங்களைச் சேகரித்துக் கொண்டே இருப்பர்.

ஒருவன் கேட்கும்கேள்விகளுக்கு மின்னல் வேகத்தில் பதில் கூறுவர். சாதாரண உத்தியோகத்தில்இருந்தாலும் தன்தனித்திறமையால் உயர்ந்தஇடத்தைப்பிடிப்பர். அப்படி உயரமுடிவில்லை என்றால் இவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமையவில்லை என்றுதான் கருத வேண்டும். சிலர் உத்தியோகமும் பலர் சொந்தத் தொழிலும் செய்து வருகின்றனர். உத்தியோகத்தில் இருக்கும் சிலர் சொந்தமாகத் தொழில் செய்ய முயல்வர். இன்னும் சிலர்பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் புகழை அடைவர். நண்பர்கள் புடை சூழ வாழும் இவர்கள் பிறருக்கு உதவ முன்வந்து சில விஷயங்களில் மாட்டிக் கொள்ளுவர்.

பொருத்தமானதாக அமையாதவர்கள் திறமையிருந்தும் கஷ்டத்திற்குள்ளாகின்றனர். இதனால் பெயரை நன்கு மாற்றி அமைத்துக் கொண்டு, நல்ல மனைவி, நல்ல குழந்தை, நல்ல ஆரோக்கியம், நிறைந்த செல்வம் பெற்றுச் சிறப்பாக வாழலாம். நண்பர்களது ஆதரவு என்றும் உண்டு.

### தொழில்

பேச்சாலும், எழுத்தாலும் பொருள் சேர்க்கும் வாய்ப்பு உண்டு. கமிசன், வாகனம், நெருப்பு, இரும்பு சம்பந்தமான தொழிலாலும், நான்கு கால் சாமான்களாலும் பொருள் சேர்க்கும் யோகம் உண்டு.

### நோய்

இவர்களுக்கு அதிக உஷ்ணமான நோய்கள் அனைத்தும் வரும். மூலவியாதி, இரத்த அழுத்தம், வாயுக் கோளாறு சம்பந்தப்பட்ட நோய்கள் வருவதால் முன் கூட்டியே

## ஆர். ஐ. துரைமுருகர்

ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்திருக்குமேயானால் எல்வித துன்பம் வந்தாலும் இறுதியில் நன்மையாகவே முடியும். சாதாரணமனிதனாக இருந்து, படிப்படியாக வாழ்க்கையின் உச்சநிலையை அடைவர்.

எவ்வளவு பணம் வந்தாலும், செலவு காத்துக் கொண்டிருக்கிறதேஎன்றுவேதனைப் படுவர். நாணயமாகவும், நம்பிக்கையாகவும் நடந்து கொள்வதால் இவர்களைப் பலர் நம்புவதோடு இவரது தலைமையையும் பலர்ஏற்றுகொள்ளுவர். புகழ்ச்சியில் மயங்குவதால், இவரைப் புகழ்ந்து பேசி நண்பர்கள் இவர்களிடம் காரியம் சாதித்துக் கொண்டுவிடுவர்சாப்பாட்டுப் பிரியரான இவர்களுக்கு நல்ல ருசியானசாப்பாடு எப்பொழுதும் தேவை. ஆனால்ஒருகாரியத்தில் இறங்கி விட்டால் எதையும் அலட்சியம் செய்யாமல்உழைப்பர்.

இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் உத்தியோகத்திலும், தொழிலிலும்உயர்ந்த நிலையில் இருப்பதை நான் அறிவேன், ஆனால் பெயர் தவிர்க்க முயலவேண்டும். பொருத்தமான எண்ணில் பெயரை அமைத்துக் கொண்டால் நோயிலிருந்து விடுபடலாம்.

### பெயர் அமைக்கும் முறை

இராகு, சூரியன் போன்ற ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு, சூரியன் சுக்கிரன் ஆதிக்கம் வருமாறு பெயரை 10, 19, 37, 46, 64, 73; 15, 24, 33, 42, 51, 60, 69 போன்ற எண்களில் அமைத்துக் கொள்ளுவது சிறப்பாகும். தான் செய்கின்ற வியாபார விலாசத்தையும், இந்த எண்ணிக்கையில் அமைத்துக் கொண்டால் லாபம் அடையலாம்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண்- 1, 6; யோகமான தேதிகள்- 1, 10, 19, 28; 6, 15, 24 யோகமான நிறம்- மஞ்சள், நீலம் யோகமான மோதிரக்கல் -கோமேதகம், வெளிர்நீலக்கல் (ஆறு நூல் ஓடுகின்றகல் மிகச் சிறப்பானது) - ஆகாத நிறம்- கறுப்பு, சிவப்பு ஆகாத தேதிகள் -8, 17, 26 ஆனால் எதிர் பாராத நன்மை அளிக்கும்.

(தொடரும்)

## கந்தசஷ்டி உற்சவம்

புங்குடுதீவு பெருங்காடு கந்தசுவாமி கோவிலில்கடந்த 12 வருடங்களின் பின்னர் கந்தசஷ்டி திருவிழா இடம் பெற்றுவருகின்றது.

இன்றைய தினம் சூரசங்காரமும் நாளை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளது. (உ)

## இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியின் அனைத்துப் பீட மாணவர்களுக்குமான ஆண்டு இறுதிப் பரீட்சைகள் விரைவில் இடம்பெறவுள்ளன.

இதனடிப்படையில் செய்முறைப் பரீட்சை இம் மாதம் 25 ஆம் திகதியும் எழுத்துப் பரீட்சை டிசம்பர் மாதம் 16 ஆம் திகதியும் இடம் பெறவுள்ளன. (உ-9)

## படைவீரர் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை பகுதியில் உள்ள இராணுவ முகாமில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர் ஒருவர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

ஆர். மகிந்தவன்ச வயது - 28 என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இவரது சடலம் மரண விசாரணையின் பின்னர் கொழும்பில் உள்ள உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (உ-10)

## இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளை வெள்ளி விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக்கிளையின் வெள்ளி விழா நிகழ்வு நாளை காலை 8.00 மணிக்கு முகாமையாளர் ந. சிவரட்ணம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கி வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் கலந்துகொள்ளவுள்ளார்.

தொடர்ந்து வாடிக்கையாளர் கௌரவிப்பு, மதத் தலைவர்களின் ஆசிபெறல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (உ)

## இடம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை கணக்கர் சந்தியில் இயங்கிவந்த படையினரின் சிவில் நிர்வாகக் காரியாலயம் கொழும்புத்துறை சுவாமியார் வீதிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது. (உ)

# வரவு செலவுத் திட்டத்தில் எவ்விதநன்மையும் இல்லை

## சிஹல உறுமய கரும் சீற்றம்

(கொழும்பு)

சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவுத்திட்டம்பெரும் வர்த்தகர்களுக்குசார்பானது. சாதாரண மக்களுக்கு மிகச் சிறிதளவுநன்மைகளே இடமளிக்கிறது என்று சிஹல உறுமய கட்சி தலைவர் திலக்கருணாரத்தின வரவுசெலவுத்திட்டம் குறித்து கருத்து தெரிவித்துள்ளார். வருமான வரியின் உச்ச எல்லையை 30 சதவீதமாக குறைப்பதால் மிகப்பெரும் பணக்காரர்கள் நன்மையடைவர். செல்வந்தர்கள் மீது வரிவிதிப்பதும், வறியவர்களுக்கு நிவாரணமளிப்பதுமேதேவையும்நியாயமும். கடந்தகாலங்களின் முன் மாதிரியான செயற்பாடுகளுமாகும்.

ஐ. தே. முன்னணி இதனை தலைகீழாக மாற்றிச் செயற்பட்டிருக்கிறது. சாதாரண மனிதன் முற்றுமுழுதாக புறக்கணிக்கப்பட்டிருக்கிறான்.

வங்கிக்கணக்குகளுக்கு வற்வரி விதிக்கப்பட்டிருப்பதால் வர்த்தகர்கள் பொருட்களை அதிகவிலைக்கு விற்பர். இதுவும் சாதாரண மனிதனையே பாதிக்கிறது.

வரவு செலவுத்திட்டம் தொடர்பாக பெரும் ஆரவாரம் காட்டப்பட்டதேயன்றி, பெரிதாக ஒருநன்மையும் ஏற்பட்டிருக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (இ)

# அகதிகளாக அலையும் தமிழினம் தாய்மண்ணை அடைந்துவளம்பெறும்

## திராவிடக்கழகப் பொதுச்செயலர்வீரமணி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை வெற்றிகரமானதாகஅமைந்துள்ளமைகுறித்து திராவிட கழகப் பொதுச் செயலர் கி. வீரமணிபாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தாய்லாந்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் சுமுகமான முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது உலகத்தார் அனைவருடையபாராட்டுதலுக்கு உரியதாகியது. இருதரப்பினரும் ஆக்கபூர்வமான முடிவுகளை எடுத்துள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் அவர்:

பேச்சுவார்த்தை முறிந்து விட வேண்டும்என்று எண்ணுகிற ஆதிக்க சக்திகளும் தமிழர் விரோதச் சக்திகளும் இலங்கையிலும் உண்டு. இந் நாடுகளில் அரசுகளுக்குள்ளும் உண்டு அவைகளின் ஆசைகள் மலைபோலத் தோன்றி பனி போல் மறைந்து விட்டன.

முன்பு திம்புவில் பேச்சுவார்த்தை நடைபெற்ற போது விடுதலைப் புலிகளின் தளபதி குமரப்பாபோன்றவர்களைக் கைதுசெய்துஇலங்கை அரசிடம் ஒப்படைக்க முயன்றதால் அப்போதே ஏற்பட வேண்டிய அமைதித் தீர்வு தடுக்கப்பட்டது.

ஆனால்: இப்பொழுது ஏற்பட்டுள்ள சமாதான பேச்சுக்கள் மூலம் புலம் பெயர்ந்து உலகில் பல்வேறு நாடுகளில் அகதிகளாக வாழும் தமிழினம் மீண்டும்தாய் மண்ணை அடைந்து வளம்காணும் வாய்ப்பு வந்து கொண்டிருக்கிறதுஎன்பது நாம் அடையும் ஆறுதலாகும்.

விடுதலைப் புலிகள்- இலங்கை அரசு- நோர்வே அரசு-தாய்லாந்து அரசு ஆகியவற்றின் செயற்பாட்டை மனித நேயம் உள்ளவர்களும் உலகத் தமிழினமும் பாராட்டாதிருக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

(உ-7)

நாவாந்துறைப் படிப்பகம்

| | |
|---|---|
| யா/தெ/502 | சேனாதிராசா இராசரத்தினம் |
| யா/தெ/621 | திருமதி.இராசம்மா இரத்தினம் |
| யா/தெ/627 | கதிரித்தம்பி முருகையா |
| யா/தெ/628 | திருமதி.அன்னபூரணம் சிவகுரு |
| யா/தெ/689 | திருமதி.கௌசலாதேவி அருச்சுனராசா |
| யா/தெ/721 | கனகசபை பொன்னையா |
| யா/தெ/764 | பூர்ணிமா சோமசேகரன் |
| யா/தெ/787 | திருமதி.லீலாவதி குணராசசிங்கம் |
| யா/தெ/832 | பொன்னுத்துரை முரளிதரன் |
| யா/தெ/862 | பொன்னம்பலம் சண்முகராசா |
| யா/தெ/871 | கிருஸ்ணபிள்ளை மகேஸ்வரன் |
| யா/தெ/888 | சிவப்பிராகாசம் திருநாவுக்கரசு |
| யா/தெ/900 | மாரிமுத்து நற்குணம் |
| யா/தெ/905 | இராசையா சுந்தரலிங்கம் |
| யா/தெ/913 | ஆசீர்வாதம் பெனடிற் இராசதுரை |
| யா/தெ/915 | திருமதி. நாகேஸ்வரி சிவப்பிரகாசம் |
| யா/தெ/922 | வன்னியசிங்கம் குகவேள் |
| யா/தெ/930 | திருமதி.கலைமகள் திருநாதன் |
| யா/தெ/950 | சிவசுப்பிரமணியம் சிவகரன் |
| யா/தெ/957 | சவிரிமுத்து பெனடிற் ஜோசப்லாபர் |
| யா/தெ/958 | திருமதி.நாகம்மா நாகலிங்கம் |
| யா/தெ/971 | சிவதாசன் நித்தியானந்தம் |
| யா/தெ/976 | திருமதி.நவமணி ஞானலிங்கம் |
| யா/தெ/981 | இராஜசௌந்தரம் ஜோஇன்பராஜ் |
| யா/தெ/990 | திருமதி.வள்ளியம்மை சின்னத்தம்பி |
| யா/தெ/991 | திருமதி.சாந்தாம்பாள் சேனாதிராசா |
| யா/தெ/997 | நடராஜசிங்கம் கிருபாகரன் |
| யா/தெ/1036 | ஆறுமுகம் கணபதிப்பிள்ளை |
| யா/தெ/1089 | தம்பிப்பிள்ளை சண்முகநாதன் |
| யா/தெ/1139 | பிரபா சிவசுப்பிரமணியம் |
| யா/தெ/1178 | முத்துநாயகம் இராஜ்மோகன் |
| யா/தெ/1226 | அப்பர்சுவாமி அண்ணாமலை |
| யா/தெ/1231 | திருமதி.சூரியகலா ஜீவரட்ணம் |
| யா/தெ/1253 | சதாசிவக்குருக்கள் திருச்செந்தில்நாதசர்மா |
| யா/தெ/1273 | கந்தசாமி உமாசங்கர் |
| யா/தெ/1343 | வேலுப்பிள்ளை தம்பிராஜா |
| யா/தெ/1355 | நடராசா தனபாலன் |
| யா/தெ/1428 | அம்பலாணர் சின்னத்தம்பி |
| யா/தெ/1438 | கிருஷ்ணர் வைகுந்தன் |
| யா/தெ/1451 | திருமதி.மனோரஞ்சிதமலர் சிவசுப்பிரமணியம் |
| யா/தெ/1453 | கந்தையா கார்த்திகேசு |
| யா/தெ/1469 | இராசரட்ணம் ஜெயமனோகர் |
| யா/தெ/1487 | கதிர்காமு சின்னத்துரை |
| யா/தெ/1550 | திருமதி.சிவபாக்கியம் ஆறுமுகம்பிள்ளை |
| யா/தெ/1600 | அந்தோனி தேவசகாயம் |
| யா/தெ/1633 | இராமலிங்கம் இராசலிங்கம் |
| யா/தெ/1642 | ராகினி இராசரெத்தினம் |
| யா/தெ/1653 | இளையவி வல்லிபுரம் |
| யா/தெ/1663 | நாகமணி சிவசுப்பிரமணியம் |
| யா/தெ/1668 | பொன்னம்பலம் சண்முகலிங்கம் |
| யா/தெ/1692 | கந்தசாமி சித்திவினாயகவடிவேல் |
| யா/தெ/1695 | முத்துக்குமாரு கந்தசாமி |
| யா/தெ/1826 | கந்தப்பு கனகசிங்கம் |
| யா/தெ/1852 | பொன்னையா தங்கராசா |
| யா/தெ/1928 | திருமதி.இராஜேஸ்வரி தியாகராசா |
| யா/தெ/1982 | வல்லிபுரம் செந்திவேற்பிள்ளை |
| யா/தெ/2021 | தம்பையா துரைசிங்கம் |
| யா/தெ/2062 | திருமதி.செல்வராணி மாணிக்கசுந்தரம் |
| யா/தெ/2075 | தம்பு சேவரத்தினம் |
| யா/தெ/2084 | திருமதி.சரஸ்வதி இராசா |
| யா/தெ/2090 | ச.வயிரமுத்து இரத்தினம் |
| யா/தெ/2092 | திருமதி.கனகேஸ்வரி சோமநாதன் |
| யா/தெ/2123 | திருமதி.நாகரத்தினம் பத்மநாதன் |
| யா/தெ/2127 | ஐயும்பிள்ளை மகேஸ்வரன் |
| யா/தெ/2211 | திருமதி.சிவஞானவதி ஏரம்பமூர்த்தி |
| யா/தெ/2222 | பொன்னம்பலம் முத்துக்குமாரு |
| யா/தெ/2293 | சிவாஜினி இரத்தினகோபால் |
| யா/தெ/2309 | நாகமணி சின்னத்துரை |
| யா/தெ/2343 | தம்பு மயில்வாகனம் ராமகிருஸ்ணன் |
| யா/தெ/2394 | திருமதி.ஞானாம்பாள் பாலசிங்கம் |
| யா/தெ/2396 | வயிரவன் அருணாசலம் |
| யா/தெ/2457 | திருமதி.செல்லம்மா கந்தசாமி |
| யா/தெ/2492 | சித்திராங்கனி மஞ்சுளா முத்துக்குமாரு |
| யா/தெ/2540 | செம்பாப்போட்டி வயந்தராசபிள்ளை |
| யா/தெ/2547 | நமசிவாயம் சிவலிங்கம் |
| யா/தெ/2551 | திருமதி.மங்கையற்கரசி இளையதம்பி |
| யா/தெ/2597 | திருமதி.பரிமளம் கந்தையா |
| யா/தெ/2695 | வடிவேலு தம்பிராசா |
| யா/தெ/2728 | வரத இரத்தினராசா குணசீலன் |
| யா/தெ/2732 | திருமதி. சுகுணா கேசவமூர்த்தி |
| யா/தெ/2826 | சடாட்சரம் ஞானச்சந்திரன் |
| யா/தெ/2829 | ஜெயரஞ்சினி சபாரட்ணம் |
| யா/தெ/2976 | திருமதி.தேவி குணசேகரன் |
| யா/தெ/3042 | வேலுப்பிள்ளை தில்லைநாதன் |
| யா/தெ/3076 | ஐயாத்துரை மனோரஞ்சன் |
| யா/தெ/3129 | திருமதி.பரிமளசுப்பிரமணியம் |
| யா/தெ/3135 | திருமதி. மங்கையற்கரசி கரரத்தினம் |
| யா/தெ/3166 | திருமதி.இராசமணி குருநாதபிள்ளை |
| யா/தெ/3185 | திருமதி.ஜெயந்தி சர்மராசா |
| யா/தெ/3224 | நவரட்ணசிங்கம் வவா |
| யா/தெ/3259 | திருமதி.வதனி பாஸ்கரன் |
| யா/தெ/3262 | கந்தன் இரத்தினவடிவேல் |
| யா/தெ/3344 | காசிப்பிள்ளை முருகுப்பிள்ளை |
| யா/தெ/3361 | அரியரட்ணம் பாஸ்கரன் |
| யா/தெ/3362 | குகேந்திரன் விஜயகுமார் |
| யா/தெ/3402 | வைரமுத்து தவராஜா |
| யா/தெ/3465 | கந்தர் சின்னப்பு |
| யா/தெ/3502 | சுப்பிரமணியம் விஜயராகவன் |
| யா/தெ/3548 | சுப்பிரமணியம் சுந்தரமூர்த்தி |
| யா/தெ/3559 | திருமதி.குழந்தை ஐயங்கார் |
| யா/தெ/3592 | வீரகத்தி பொன்னப்பா |
| யா/தெ/3610 | திருமதி. பவானி ஜெயராசா |
| யா/தெ/3613 | திருமதி.லலிதா கந்தசாமி |
| யா/தெ/3618 | திருமதி.அருந்ததி தருமராசா |
| யா/தெ/3652 | அருளம்பலம் யோகலிங்கம் |
| யா/தெ/3671 | திருமதி. இலட்சுமி சபாரத்தினம் |
| யா/தெ/3841 | திருமதி.செல்வாக்கியம் கிட்டினர் |
| யா/தெ/3902 | சண்முகம் கந்தையா |
| யா/தெ/3928 | திருமதி.சிசிலியா செபமாலை |
| யா/தெ/3956 | திருமதி.இராசகுமாரி சந்திரபோஸ் |
| யா/தெ/3963 | வேலன் கந்தசாமி |
| யா/தெ/3970 | திருமதி.மாகிறறிமரியசீலி சையன் |
| யா/தெ/4010 | திருமதி.இராசேஸ்வரி நடராஜா |
| யா/தெ/4022 | திருமதி.சிந்தாதிரையம்மா அந்தோனிப்பிள்ளை |
| யா/தெ/4086 | வல்லிபுரம் ஜெயராஜா |
| யா/தெ/4134 | சிவலிங்கம் துரைசிங்கம் |
| யா/தெ/4138 | சரவணமுத்து லோகநாதன் |
| யா/தெ/4158 | திருமதி.லட்சுமி சின்னத்துரை |
| யா/தெ/4163 | கதிர்வேலு செல்லையா |
| யா/தெ/4174 | தியாகராசா கணேசமூர்த்தி |
| யா/தெ/4192 | சின்னையா இராசையா |
| யா/தெ/4216 | திருமதி.ஜெதீஸ்வரி யோகராசா |
| யா/தெ/4261 | திருமதி. செல்வராணி நவசிவாயம் |
| யா/தெ/4266 | இராசலட்சுமி தம்பு |
| யா/தெ/4409 | விமலா இராமலிங்கம் |
| யா/தெ/4423 | யோசேப் குலசேகரம் கிருபைநாதன் |
| யா/தெ/4443 | வேலாயுதம் கிருபாகரன் |

## கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| யா/க/20 | திருமதி.கௌரி பாலசிங்கம் |
| யா/க/32 | வல்லிபுரம் இராசதுரை |
| யா/க/53 | திருமதி.சிதம்பரம் இராசசிங்கம் |
| யா/க/55 | திருமதி.விமலாதேவி சர்வானந்தம் |
| யா/க/113 | விமாலாதேவி கார்த்திகேசு |
| யா/க/121 | திருமதி.சிவயோகமலர் லீலாரத்தினம் |
| யா/க/128 | திருமதி.ரேவதி தேவானந்தன் |
| யா/க/154 | வல்லி மதியழகன் |
| யா/க/161 | திருமதி.நீலாம்பிகை பாலசுப்பிரமணியம் |
| யா/க/206 | திருமதி.யோகநாயகி புஸ்பராஜா |
| யா/க/289 | ஜெயராணி கிருஸ்ணபிள்ளை |
| யா/க/307 | கிருஷ்ணன் இராசரத்தினம் |
| யா/க/324 | திருமதி.கமலாதேவி கனகசிங்கம் |
| யா/க/336 | திருமதி.லீலாவதி தர்மலிங்கம் |
| யா/க/347 | திருமதி.தெய்வானை வீரகத்தி |
| யா/க/358 | முருகேசு கந்தசாமி |
| யா/க/381 | திருமதி.செல்லம்மா சதாசிவம் |
| யா/க/402 | திருமதி.பரமேஸ்வரி பஞ்சலிங்கம் |
| யா/ க/417 | இராமலிங்கம் பஞ்சராசா |
| யா/க/418 | திருமதி.சரஸ்வதி மகாலிங்கம் |
| யா/க/422 | திருமதி.வேதநாயகமலர் தில்லைநாதன் |
| யா/க/438 | வித்தியா செல்வராஜா |
| யா/க/440 | திருமதி.இலட்சுமி இராமநாதன் |
| யா/க/471 | திருமதி.சின்னத்தங்கம் கிருஸ்ணபிள்ளை |
| யா/க/502 | திருமதி.கமலகுமாரி சிவசுப்பிரமணியம் |
| யா/க/511 | திருமதி.பூரணம் இளையதம்பி |
| யா/க/517 | திருமதி.தவமணி இராஜநாயகம் |
| யா/க/527 | பொன்னையா பழனிமலை |
| யா/க/535 | செல்வன் இராசேந்திரம் |
| யா/க/586 | கிருஷ்ணகுமாரி மாணிக்கவாசகர் |
| யா/க/600 | திருமதி. இந்திராணி மகேந்திரநாதன் |
| யா/க/663 | இராஜினி உலகநாதன் |
| யா/க/673 | சிற்றம்பலம் தங்கத்துரை |
| யா/க/685 | சபாரத்தினக்குருக்கள் வரதராசகுருக்கள் |
| யா/க/718 | மயில்வாகனம் மகேந்திரராசா |
| யா/க/745 | திருமதி.சிவபாக்கியம் இராசையா |
| யா/க/771 | திருமதி.இராஜேஸ்வரி ஜெயரட்ணம் |
| யா/க/792 | திருமதி.இலட்சுமி இராசேந்திரன் |
| யா/க/815 | தம்பையா மயில்வாகனம் |
| யா/க/829 | கனகசிங்கம் பரமேஸ்வரன் |
| யா/க/834 | திருமதி.சரஸ்வதி நமசிவாயம் |
| யா/க/896 | செல்லத்தம்பி சுதாஸ்கரன் |
| யா/க/914 | பொன்னையா இராசரத்தினம் |
| யா/க/921 | நவமாலா நவரட்ணம் |
| யா/க/924 | சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் |
| யா/க/934 | திருமதி. சவரஸ்வதி இரத்தினசிங்கம் |
| யா/க/954 | திருமதி. பூரணலீலா கிருஷ்ணபிள்ளை |
| யா/க/959 | திருமதி.சிவமதி தவச்செல்வன் |
| யா/க/990 | திருமதி.தங்கம்மா நமசிவாயம் |
| யா/க/1027 | திருமதி.சௌந்தரநாயகி விஷ்ணுனந்த மூர்த்தி |
| யா/க/1032 | அம்பலவி ஆழ்வார் |
| யா/க/1035 | திருமதி.செல்வமலர் செல்வராசா |
| யா/க/1084 | செல்லையா விஜயரட்ணம் |
| யா/க/1109 | கார்த்திகேயக்குருக்கள் சபாரத்தினசர்மா |
| யா/க/1129 | திருமதி.புவனேஸ்வரி ஆனந்தராசா |
| யா/க/1133 | திருமதி.கலாநிதி கருணாகரன் |
| யா/க/1184 | திருமதி.தங்கம்மா ஏரம்பமூர்த்தி |
| யா/க/1226 | கதிரிப்பிள்ளை செல்லத்தம்பி |
| யா/க/1291 | செல்லத்துரை இராஜேந்திரம் |
| யா/க/1322 | காசிப்பிள்ளை கந்தசாமி |
| யா/க/1575 | திருமதி.சகுந்தலாதேவி சண்முகலிங்கம் |
| யா/க/1595 | திருமதி. காந்திமலர் அருணாசலம் |
| யா/க/1725 | திருமதி. பஞ்சமணி மயில்வாகனன் |
| யா/க/1800 | ஜோர்ச்தம்பு புஸ்பராசா |
| யா/க/1811 | பொன்னம்பலம் கனகசபாபதி |
| யா/க/1814 | நல்லையா வைத்தியநாதன் |
| யா/க/1879 | சின்னையா நடராசா |
| யா/க/1899 | திருமதி. விவேகமணி இராசநாயகம் |
| யா/க/1950 | திருமதி.மங்கையற்கரசி சிவசுப்பிரமணியம் |
| யா/க/1980 | திருமதி.வள்ளிப்பிள்ளை பாமகுரு |
| யா/க/2042 | திருமதி.நேசமலர் பாலேந்திரன் |
| யா/க/2106 | கொழுந்து குணசிங்கம் |
| யா/க/2146 | விசுவலிங்கம் இரத்தினசிங்கம் |
| யா/க/2151 | திருமதி.கமலவதனா குலபாலசிங்கம் |
| யா/க/2166 | கணபதி சேனாதிபதி |
| யா/க/2184 | திருமதி.விமலாதேவி தவநேசன் |
| யா/க/2248 | இளையதம்பி ஆறுமுகம் |
| யா/க/2300 | நல்லதம்பி கதிரவேல் |
| யா/க/2303 | திருமதி. சிவயோகராணி சிறீதரன் |
| யா/க/2307 | சுப்பையா கனகலிங்கம் |
| யா/க/2432 | திருமதி.மனோன்மணி இராசா |
| யா/க/2480 | தங்கேஸ்வரி தம்பையா |
| யா/க/2487 | திருமதி. சிவகாமி இராமச்சந்திரன் |
| யா/க/2653 | திருமதி.நளினி அருந்தவராசா |
| யா/க/2672 | பொன்னையா துரையப்பா |
| யா/க/2691 | திருமதி.பகவதி சிவனேசன் |
| யா/க/2703 | செல்வநாயகம் நவரத்தினம் |
| யா/க/2711 | கணபதிப்பிள்ளை ஆனந்தசிவம் |
| யா/க/2721 | சுப்பிரமணியம்யோகசிங்கம் |
| யா/க/2791 | கந்தையா முத்துரத்தினம் |
| யா/க/2816 | கந்தையா செனகரத்தினம் |
| யா/க/2841 | திருமதி. சிவாஜினிதேவி ஜெகதவப்பிரதாபன் |
| யா/க/2871 | வேலன் முருகேசு |
| யா/க/2912 | செல்லத்துரை சபாநாயகம் |
| யா/க/2932 | நாகலிங்கம் இராஜேஸ்வரன் |
| யா/க/2944 | திருமதி.சிவபாக்கியம் செல்லத்துரை |
| யா/க/3067 | வசந்தினி கதிரவேலு |
| யா/க/3078 | செல்லையா பாலசுந்தரம் |
| யா/க/3080 | திருமதி.பார்வதி சுப்பிரமணியம் |
| யா/க/3181 | கந்தையா சிதம்பரப்பிள்ளை |
| யா/க/3191 | திருமதி பரமேஸ்வரி கணேஸ் |
| யா/க/3224 | கார்திகேசு இராசையா |
| யா/க/3270 | கணேசநாதன் தில்லைநாதன் |
| யா/க/3531 | திருமதி.கௌரிதேவி தவனேஸ்வரராசா |
| யா/க/3536 | திருமதி.தேவேஸ்வரி மார்கண்டு |
| யா/க/3545 | திருமதி.சிவபாக்கியம் நாகமுத்து |
| யா/க/3550 | குட்டித்தம்பி கனகலிங்கம் |
| யா/க/3590 | வைத்திலிங்கம் தவராசா |
| யா/க/3697 | இராசா தருமலிங்கம் |
| யா/க/3810 | தம்பு தேவராசா |
| யா/க/3876 | சிற்றம்பலம் சுந்தரலிங்கம் |
| யா/க/3951 | பொன்னுத்துரை மனோகரன் |
| யா/க/4012 | தாமோதரம்பிள்ளை சண்முகலிங்கம் |
| யா/க/4033 | திருமதி. தவனேஸ்வரி சாம்பசிவம் |
| யா/க/4075 | திருமதி.வசந்தகுமாரி இரத்தினபாலா |
| யா/க/4153 | திருமதி. செல்லம்மா ஐயாத்துரை |
| யா/க/4190 | திருமதி. சாந்தினி சிவப்பிரகாசம் |
| யா/க/4319 | மயில்வாகனம் பாலசுப்பிரமணியம் |
| யா/க/4347 | திருமதி.நல்லம்மா பொன்னம்பலம் |
| யா/க/4394 | திருமதி.மகேஸ்வரி ஏரம்பு |
| யா/க/4540 | மாணிக்கம்தியாகராசா |
| யா/க/4563 | திருமதி.சோதீஸ்வரி வெல்வராஜன் |
| யா/க/4599 | திருமதி.புனிதமலர் சிறிதரன் |
| யா/க/4631 | இராமலிங்கம் குமாரசாமி |
| யா/க/4656 | குழந்தையன் கந்தசாமி |
| யா/க/4773 | இலங்கையன் வியாகன் |
| யா/க/4791 | விஸ்வலிங்கம் செல்வராஜா |
| யா/க/4821 | திருமதி.செல்லம்மா கந்தசாமி |
| யா/க/4949 | ஆழ்வாப்பிள்ளை நடராஜா |
| யா/க/4956 | அப்பையா நடராசா |
| யா/க/4962 | இரத்தினம் பாலசுப்பிரமணியம் |
| யா/க/5002 | தம்பிராஜா அருச்சுனன் |
| யா/க/5019 | குட்டியன் சின்னக்கிளியன் |
| யா/க/5082 | திருமதி.இராசமலர் விஜயகுமார் |
| யா/க/5084 | திருமதி.இராசமலர் கிருஷ்ணபிள்ளை |
| யா/க/5190 | திருமதி.சின்னப்பிள்ளை சின்னத்துரை |
| யா/க/5260 | திருமதி.பாக்கியம் பரமானநதம் |

## வேலணை உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| யா/வே/3 | கணபதிப்பிள்ளை தணிகாசலம் |
| யா/வே/4 | வேலாயுதம் மயில்வாகனம் |
| யா/வே/6 | பேரம்பலம் கணபதிப்பிள்ளை |
| யா/வே/7 | திருமதி சத்தியபாமா சபாரட்ணம் |
| யா/வே/15 | திருமதி இராசலட்சுமி சிவலிங்கம் |
| யா/வே/19 | திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை |
| யா/வே/25 | பிலிப்பன் அந்தோனி |
| யா/வே/28 | முருகப்பன் பழனி |
| யா/வே/47 | திருமதி பத்மினி வரதராஜா |
| யா/வே/48 | திருமதி சிவனேஸ்வரி நடேசன் |
| யா/வே/52 | திருமதி விமலாதேவி கனகரத்தினம் |
| யா/வே/53 | வேலாயுதபிள்ளை வரதராஜன் |
| யா/வே/54 | நாகலிங்கம் குணரெத்தினம் |
| யா/வே/63 | சரவணமுத்து பழனிநாதன் |
| யா/வே/65 | திருமதி சிவமணி சிவலிங்கம் |
| யா/வே/69 | திருமதி மனோன்மணி சிவகுரு |
| யா/வே/76 | திருமதி இராஜேஸ்வரி கணேசன் |
| யா/வே/87 | இராமலிங்கம் கனகலிங்கம் |
| யா/வே/91 | கணபதிப்பிள்ளை தேவராசா |
| யா/வே/93 | திருமதி மகேஸ்வரி துரைசிங்கம் |
| யா/வே/94 | திருமதி சத்தியரூபி இராசலிங்கம் |
| யா/வே/95 | திருமதி லோகேஸ்வரி ஜெயசீலன் |
| யா/வே/104 | அருணாசலம் சோதிலிங்கம் |
| யா/வே/107 | தாமரைச்செல்வி திருநாயகம் |
| யா/வே/109 | திருமதி சிவபாக்கியம் சதாசிவம் |
| யா/வே/112 | திருமதி குணபூசணம் உலகநாதன் |
| யா/வே/118 | திருமதி நவராணி செல்லையா |
| யா/வே/122 | திருமதி ராஜேஸ்வரி சண்முகநாதன் |
| யா/வே/124 | டேவிட் அன்ரன் குயின்பேட் |
| யா/வே/143 | சந்திரிகா குற்றலலிங்கம் |
| யா/வே/149 | சிறீவாணி பாலசுப்பிரமணியம் |
| யா/வே/162 | ஆறுமுகம் சீவரட்ணம் |
| யா/வே/165 | திருமதி புவனேஸ்வரி அருளானந்தம் |
| யா/வே/173 | பாலசிங்கம் உருத்திரசிங்கம் |
| யா/வே/176 | திருமதி எமரென்ஸ்சியாமலர் சேவியர் |
| யா/வே/182 | கந்தையா நேசராசா |
| யா/வே/189 | கோபாலப்பிள்ளை கனகரத்தினம் |
| யா/வே/199 | நாகமணி முத்துலிங்கம் |
| யா/வே/202 | முருகர் கந்தசாமி |
| யா/வே/206 | திருமதி வனிதாமலர் செல்வராஜா |
| யா/வே/210 | சரவணமுத்து கனகரத்தினம் |
| யா/வே/212 | ஆனந்தநடராசா வசந்தரூபன் |
| யா/வே/218 | திருமதி விக்கினேஸ்வரி பரமேஸ்வரன் |
| யா/வே/220 | முருகேசு திருநாவுக்கரசு |
| யா/வே/221 | கதிரவேலு பரமலிங்கம் |
| யா/வே/222 | இளையதம்பி கணேசபிள்ளை |
| யா/வே/231 | திருமதி தவமணி நமசிவாயம் |
| யா/வே/232 | திருமதி சிவமலர் சண்முகானந்தவேல் |
| யா/வே/270 | ஆறுமுகம் தர்மபாலன் |
| யா/வே/276 | இராமச்சந்திரன் தெய்வேந்திரம்பிள்ளை |
| யா/வே/280 | ஆறுமுகம் சிவசுப்பிரமணியம் |
| யா/வே/291 | தம்பையா மகாலிங்கசிவம் |
| யா/வே/297 | திருமதி சந்திரவதனா நடேசன் |
| யா/வே/308 | பூதத்தம்பி ஆறுமுகம் |
| யா/வே/316 | திருமதி ஸ்ரீரங்கநாயகி சபாரத்தினம் |
| யா/வே/343 | செல்லத்துரை பரஞ்சோதிநாதன் |
| யா/வே/355 | திருமதி அருந்ததி கதிர்காமநாதன் |
| யா/வே/357 | சசிக்லா குணரட்ணம் |
| யா/வே/386 | திருமதி புஸ்பராணி குமாரசாமி |
| யா/வே/393 | திருமதி மரகதம் இராஜேந்திரம் |
| யா/வே/401 | திருமதி இலட்சுமி நல்லையா |
| யா/வே/423 | திருமதி சிவகெங்கேஸ்வரி சதானந்தலிங்கம் |
| யா/வே/433 | கணபதிப்பிள்ளை உலகநாதன் |
| யா/வே/438 | மாணிக்கம் ஜெயக்குமார் |
| யா/வே/458 | நாகநாதி தம்பிஜயா |
| யா/வே/499 | திருமதி தெய்வானை ஆறுமுகம் |
| யா/வே/512 | திருமதி மனோன்மணி சுப்பிரமணியம் |
| யா/வே/517 | திருமதி சத்திய்வதி சங்கரலிங்கம் |
| யா/வே/526 | திருமதி இராசேஸ்வரி குருநாதன் |
| யா/வே/538 | திருமதி கமலாதேவி பாலசிங்கம் |
| யா/வே/540 | திருமதி இராசமணி நாகேசு |
| யா/வே/557 | திருமதி இராசம்மா சண்முகம் |
| யா/வே/576 | திருமதி குணகுந்தம்மா மாட்டின் |
| யா/வே/577 | திருமதி மகேஸ்வரி தம்பிஜயா |
| யா/வே/588 | சிவசக்தி பொன்னையா |
| யா/வே/591 | சிற்றம்பலம் பத்மநாதன் |
| யா/வே/592 | திருமதி கமலரத்தினம் தனிநாயகம் |
| யா/வே/597 | திருமதி புவனேஸ்வரி நடராசா |
| யா/வே/517 | திருமதி கமலாதேவி குணபாலச்சந்திரன் |
| யா/வே/635 | திருமதி அருந்தவநாயகி காராளபிள்ளை |
| யா/வே/640 | திருமதி புவனேஸ்வரி கனகலிங்கம் |
| யா/வே/641 | பொன்னையா கனகரத்தினம் |
| யா/வே/651 | திருமதி யோகேஸ்வரி கிருபானந்தன் |
| யா/வே/681 | சதாசிவக்குருக்கள் சிவசுப்பிரமணியக்குருக்கள் |
| யா/வே/692 | பொன்னையா நாகரத்தினம் |
| யா/வே/698 | திருமதி கண்ணம்மா செல்லத்துரை |
| யா/வே/709 | இராஜேஸ்வரி செல்லையா |
| யா/வே/713 | திருமதி நாகமுத்து சின்னையா |
| யா/வே/718 | திருமதி புனிதவதி சிவகணநாதன் |
| யா/வே/721 | திருமதி மங்கையர்க்கரசி சுப்பிரமணியம் |
| யா/வே/742 | திருமதி புனிதவதி இராசரத்தினம் |
| யா/வே/745 | திருமதி. சீதேவிப்பிள்ளை இராசையா |
| யா/வே/754 | திருமதி கலாவதி செல்வகுணராசா |
| யா/வே/763 | திருமதி அன்னலட்சுமி நவரத்தினசிங்கம் |
| யா/வே/780 | திருமதி செல்வராணி ஐயாத்துரை |
| யா/வே/783 | திருமதி பங்கையற்செல்வி கண்ணையா |
| யா/வே/786 | திருமதி கமலாம்பாள் சதாசிவம் |
| யா/வே/800 | திருமதி புஸ்பராணி குணரத்தினம் |
| யா/வே/802 | திருமதி கமலாதேவி சுந்தரம்பிள்ளை |
| யா/வே/805 | குமுதினி சாம்பசிவம் |
| யா/வே/818 | திருமதி நாகம்மா சோதிராசா |
| யா/வே/824 | திருமதி சற்குணம் திருச்செல்வம் |
| யா/வே/829 | திருமதி யோகேஸ்வரி பேரம்பலம் |
| யா/வே/833 | திருமதி பங்கயாசினி மாணிக்கம |
| யா/வே/835 | திருமதி லூயிசா கிறிஸ்தோத்திரம் |
| யா/வே/842 | திருமதி கிருபாமணி வரதராசன் |
| யா/வே/872 | திருமதி சரஸ்வதி மகேஸ்வரன் |
| யா/வே/890 | நாகலிங்கம் பாலசிங்கம் |
| யா/வே/897 | திருமதி செல்லம்மா அம்பலவாணர் |
| யா/வே/937 | தம்பாப்பிள்ளை ஆத்மசரன் |
| யா/வே/954 | திருமதி கந்தசோதி சரவணபவன் |
| யா/வே/958 | மாயா சோமசுந்தரம |

மீளளிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட, ஏனைய பிரதேசத்தவர்களின் பெயர்கள் தொடர்ந்து வெளிவரும்.

## வடகொரிய அணுஆயுத அச்சுறுத்தல்

# ஏவுகணை கவசம் உருவாக்க ஜப்பானுக்கு யு. எஸ். யோசனை

(நியூயோர்க்)

வடகொரியாவின் அணுவாயுதத் திட்டத்தினால் தோன்றியுள்ள அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில் ஏவுகணைக் கவச முறையொன்றை அமைப்பது தொடர்பாக ஜப்பான் நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஜப்பானியப் பாதுகாப்பு அமைச்சரை இன்று டோக்கியோவில் சந்திக்கும்போது அமெரிக்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் இவ்விடயத்தினை வலியுறுத்துவார் என்று ஜப்பான் செய்தியொன்று கூறுகின்றது.

1998 ஆம் ஆண்டு வடகொரியா பரீட்சார்த்தமாக ஏவிய ஏவுகணையொன்று ஜப்பானுக்கு மேலாகப்பறந்ததையடுத்து ஏவுகணைக் கவசப் பாதுகாப்பு முறையொன்று அமைப்பது தொடர்பாக ஜப்பான் அமெரிக்காவுடன் இணைந்து கூட்டாராய்ச்சி முறையொன்றை உருவாக்கத் தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது. (4)

## ஆப்கான் அதிபருக்கு சர்வதேச சுதந்திர விருது

(காபூல்)

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அமீர்ஹர்சாயிற்கு, நியூயோர்க் நகரில் சர்வதேச சுதந்திர விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

ஆப்கானிஸ்தானின் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு பெரும்பாடுபட்டவர் ஜனாதிபதி அமீர்ஹர்சாய் என்று சர்வதேச விருது வழங்கும் குழுவினால் பாராட்டப்பட்டுள்ளார்.

இவருக்கான விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்ச்சி நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ளதால் இவ்வார இறுதிக்குள் இவர் நியூயோர்க் செல்வாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## உச்ச நீதிமன்றத் தீர்ப்பு அமெரிக்க மக்களுக்கு அச்சுறுத்தலை கூட்டுமா?

(நியூயோர்க்)

அஸ்னோ ஹஸான் என்பவரை அமெரிக்க உச்சநீதிமன்றம் எதிர்வரும் 14 ஆம் திகதி விஷ ஊசி ஏற்றிக் கொலை செய்யுமாறு தீர்ப்பளித்துள்ளது.

அமெரிக்க உள்துறை அமைச்சரவையைச் சேர்ந்த 2 அதிகாரிகள் 1993 ஆம் ஆண்டு கொல்லப்பட்டமை தொடர்பாக இவர் அமெரிக்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைத்து விசாரணை செய்யப்பட்டுவந்தார்.

தீவிர விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அஸ்னோ ஹஸானிற்கு விஷ ஊசி ஏற்றிக் கொலை செய்யுமாறு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இத்தீர்ப்பானது உலகெங்கிலும் உள்ள அமெரிக்க மக்கள் தீவிரவாதத் தாக்குதல்களுக்கு உள்ளாக வாய்ப்பளிக்கக் கூடும் என அமெரிக்க அரசு கருதுவதால், உலக நாடுகளிலுள்ள தனது அனைத்து தூதரகங்களையும் தற்காலிகமாக மூடிவிடும்படியும் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## அவசரகாலச் சட்டத்தை நீடிக்குமாறு உத்தரவு

கொலம்பிய ஜனாதிபதி அல்வாரோ ஹிறியட், நாட்டில் அவசர காலச்சட்டத்தை மேலும் 90 நாட்களிற்கு நீடிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கொலம்பியாவில் சட்ட விரோத ஆயுதக் குழுக்களால் கடந்த 38 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் மோதல்களை முடிவுக்கு கொண்டு வரும் வகையிலே இந்த அவசர காலச் சட்டம் நீடிக்கப்பட்டுள்ளதென அவர் தெரிவித்துள்ளார். (2)

## ஐ. நா. தீர்மானத்துக்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்து

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை இறுதிச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமாறு அமெரிக்க ராஜாங்க செயலர் கொலின் பவல் வலியுறுத்தியுள்ளார்.

ஈராக் விடயம் தொடர்பாக எகிப்து சவுதி அரேபிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள், மற்றும் ஆரம்ப சம்மேளன செயலாளர் நாயகம் ஆகியோரைச் சந்தித்துப் பேசிய போதே கொலின்பவல் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஈராக்குடன் தொடர்புடைய அனைத்து நாடுகளும் ஐக்கிய நாடுகளின் இத் தீர்மானத்திற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஈராக்கை வலியுறுத்த வேண்டுமெனவும் அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (2)

# உலக தரிசனம்

## இந்திய மீனவர் பாக். படையினரால் கைது

(அகமதபாத்)

குஜராத் கஜ் மாவட்டத்தின் மேற்குக் கரையைச் சேர்ந்த 14 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் இராணுவம் கைது செய்துள்ளது.

அகமதாபாத் மாநில மீன்வளத்துறை மூத்த அதிகாரி இதனை உறுதி செய்துள்ளார். (2)

## சிறுவர் திரைப்பட விருது மாற்லிக்கு

சர்வதேச குழந்தைகளிற்கான திரைப்பட விருது மாற்லி என்ற திரைப்படத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருது, சிக்காக்கோ சர்வதேச திரைப்பட விழாவில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

இவ் உலகத்தில் காலடி எடுத்து வைக்கும் குழந்தைகளை சில சக்திகள் மிருகங்களாக மாற்றுவதாக இத் திரைப்படத்தின் கதை அமைந்துள்ளது. (02)

## மத்திய வங்கியினுள் நுழைந்த ஆயுததாரி துப்பாக்கி சூட்டுக்குப் பலி

(ரியாத்)

சவுதி அரேபியத் தலைநகர் ரியாத்தில் உள்ள மத்தியவங்கியில் புகுந்த ஆயுதம் தாங்கிய நபரை ரியாத் பொலிஸார் சுட்டுக்கொன்றுள்ளனர்.

மத்தியவங்கியின் கட்டடத்திற்குள் காவல் பணியாளர்களை மீறி ஆயுதங்களுடன் உட்புகுந்த மேற்படி நபர் பணத்தை கொள்ளையிட முயற்சித்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (02)

# வெனிசுலா தேர்தல் தொடர்பான சர்ச்சைக்கு முடிவு கட்டத் தயார்

## ஜனாதிபதி அறிவிப்பு

(கரகஸ்)

வெனிசுலா தேர்தல் தொடர்பாக எழுந்துள்ள சிக்கல் குறித்து பேச்சு நடத்த ஜனாதிபதி ஹூகோசாவெஸ் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளார்.

வெனிசுலாவின் பொருளாதாரம் சீர்கெட்டு வருகின்றது எனவும் வேலையின்மை, வறுமை அதிகரித்து வருகின்றது எனவும் ஜனாதிபதியின் அதிருத்தியாளர் குற்றம் சாட்டி வருவதையடுத்தே ஜனாதிபதி மேற்படி அறிவித்தலைவிடுத்துள்ளார்.

இதனிடையே ஜனாதிபதிக்கும் அதிருப்தியாளர்களுக்கும் இடையே பேச்சு நடத்த அமெரிக்கா உளதுறை அமைப்பின் தலைவர் முன்வந்துள்ளார்.

டிசம்பர் 4ஆம் திகதிக்குள் தேர்தல் நடாத்தப்படா விட்டால் நாடு தழுவிய ரீதியில் கலவரங்களை ஏற்படுத்தப் போவதாக அதிருப்தியாளர்கள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

## இந்தியாவில் ஒளித்திருக்கும் பங்களா. குற்றவாளிகளை பிடித்துதரும்படி கோரிக்கை

(டாக்கா)

இந்தியாவில் ஒளித்திருக்கும் பங்களாதேஷ் குற்றவாளிகளை கைது செய்து, திரும்பத் தம்மிடம் ஒப்படைக்கும்படி இந்திய அரசிடம் முறையான கோரிக்கையொன்றை விடுவிக்கவிருக்கின்றது.

பங்களாதேஷில் நடைபெற்றஇராணுவநடவடிக்கையின் போது ஓடிமறைந்த பங்களாதேஷ் குற்றவாளிகள் இந்தியாவின் கொல்கத்தா மற்றும் மேற்கு வங்காளப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களை இந்திய அரசு கைது செய்து தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென கோரிக்கை விடப்போவதாக பங்களாதேஷ் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிற்கும் பங்களாதேஷிற்கும் இடையில் நீண்டகாலமாக நல்லுறவு நிலவி வருவதால் இக்கோரிக்கையினை இந்தியா நிறைவேற்றுமென பங்களாதேஷ் அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது. (2)

# ஐ.நாவின் கொள்கைகளுக்கு ஈராக், பணிந்துபோகுல் சாத்தியம்

(பக்தாத்)

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய கொள்கைகளுக்கு ஈராக் பணியும் சாத்தியம் உண்டு என பக்தாத்திலிருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா எப்பொழுதும் ஈராக்கின் எண்ணெய் வளத்தை அழிப்பதிலேயே குறியாய் இருக்கின்றது.

அதற்கு ஈராக் பதிலடி கொடுத்தற்காகவே இன்னும் ஈராக்கை, அமெரிக்கா பழி வாங்கி வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை ஈராக்கின் இறைமையை, ஈராக்கியர்களின் மனித உரிமைகளை மீறாதவகையில் நடந்து கொள்ளும் என பக்தாத் நம்புகிறது.

இதனால் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புத் தொடர்பான புதிய கொள்கைகளுக்கு ஈராக் வரவேற்பளித்துள்ளது என்று அல்-தவ்றா பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-3)

## வெனிசுவேலாவில் பேச்சுக்கள் ஆரம்பம்

(காராகஸ்)

வெனிசுவேலா ஜனாதிபதி கியூகோஜாரர்ஸ் உள்நாட்டுப் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளார்.

கடந்தசில காலமாக ஏற்பட்டு வந்த கருத்து முரண்பாடுகள், வீண்பிரச்சினைகள், உள்நாட்டு மோதல்கள் என்பவற்றை முடிவுக்கு கொண்டு வரவேண்டுமாயின் அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்று எதிர்க்கட்சியாளர்களிற்கு வெனிசுவேலா ஜனாதிபதி அழைப்பு விடுத்ததையடுத்து, தற்போது இருதரப்பினர்களிற்கும் இடையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெனிசுவேலா ஜனாதிப்தி கியூகோ ஜாரிஸ்ஸ பதவியை நீக்கும் வகையில் கடந்த 7 மாதங்களிற்கு முன் இடம் பெற்ற சதித்திட்டங்கள் முறியடிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (02)

# ஈழத்தமிழர் தம்மைத்தாமே ஆளும் நிலை வெகு தூரத்தில் இல்லை

## பாண்டிச்சேரி கல்வி அமைச்சர்

(கொழும்பு)

ஈழத் தமிழர்கள் தங்கள் நாட்டை தாங்களே ஆளும் நிலை வெகுவிரைவில் உருவாகும் என பாண்டிச்சேரி கல்வி அமைச்சர் லட்சுமி நரராயணன் கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகம் அமரர் அ.அமிர்தலிங்கத்தின் பவள விழா நிகழ்வில் மேற்படி குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கையில் சிறந்த அமைதியான முடிவுவந்துள்ளது. அதற்கான பாதை நல்ல முறையில் போடப்பட்டுள்ளது.

எவ்வித அடிப்படை வசதியும் இல்லாமல் விடுதலைப் போருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது கடினமான விடயம்.

விடுதலைப் போராட்டத்தின் அவசியத்தை எடுத்துக் கூறி, மக்களை தயார்செய்வது கடினமானது. ஈழத் தமிழர்

(3-ம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
(stamp, partly legible)

முறைபடச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலா அதவர்
குறள்

## வலம்புரி

## அச்சா கூறும் கூட்டமைப்பு

ஐ. தே. முன்னணி அரசின் வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புச் செலவினத்தில் குறைப்பு எதுவும் இல்லை.

இந்நிலையில், ஐ.தே. முன்னணி அரசின் வரவு செலவுத் திட்டத்தைக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஆகா அச்சா அச்சா என்று பாராட்டியிருக்கிறார்கள். இதனைப் பார்க்கும் போது ஒரு கதைதான் ஞாபகத்திற்கு வருகிறது.

மன்னனை ஏமாற்றி பணம் பறிக்க முற்பட்ட ஒருவன் தான் ஒரு நெசவாளி எனவும் தன்னிடம் விலையுயர்ந்த ஆடை இருப்பதாகவும் கூறினான். ஆனால் அந்த ஆடை நல்லவர்களினதும் அறிவாளிகளினதும் கண்களுக்கு மட்டுமே தெரியுமென்றும் முன் கூட்டியே தெரிவித்துக் கொண்டான். இச் செய்தி அமைச்சர்களுக்கும், பிரதானிகளுக்கும் அறிவிக்கப்பட்டது. நெசவாளி வெறுங்கையை ஏந்தியவாறு அரண்மனைக்கு வருகிறான். மன்னனைப் பார்த்து மன்னா! என்னிடம் இருக்கின்ற ஆடை எப்படி அழகாக இருக்கிறதா? என்று கேட்கிறான், ஆடை எதனையும் காணாதமன்னன்யோசிக்கிறான் நல்லவர்களுக்கும் அறிவாளிகளுக்கும் மட்டுமே தெரியும் என்று ஏற்கனவே சொல்லியுள்ளானல்லவா! நன்றாக இருக்கிறது என்று மன்னன் கூற மற்றவர்களும் அப்படியே ஆமாம் போட்டனர்.

மன்னனின் ஆடைகள் களையப்படுகிறது, நெசவாளி தான் கொண்டு வந்த ஆடையை மன்னனுக்கு அணிவது போல நடிக்கின்றான். இப்போது மன்னன் நிர்வாணமாகத் தெரிகின்றான். என்ன செய்வது நல்லவர்களுக்கும், அறிவாளிகளுக்கும் தானே ஆடை தெரியுமென்று நெசவாளி கூறிவிட்டான் அதனால் எல்லோரும்ஆடை அச்சா அச்சா என்றனர்.

இதே நிலைதான் கூட்டமைப்பினரின் நிலையும் வரவு செலவுத் திட்டத்தில் என்ன இருக்கிறது என்பதை ஆராயாமல் ஆமாப் போடுவது நிர்வாணமாக நிற்கும் மன்னனைப் பார்த்து அச்சா எனக் கூறியதுபோல ஒப்பானதாகும்.

இத்தகைய நிலைமைகளை கூட்டமைப்பினர் தவிர்ப்பது நல்லது.

# 'என் வார்த்தைகளை ஏற்கும் அன்புள்ளவர்கள்மீது பரமபிதா அன்பு கொள்வார்' என்றார் இயேசு



## பரமபிதா காட்டிய பாதை

இயேசு சீஷர்களுக்கு உபதேசிக்கின்றார். நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என்கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். நான் பிதாவை வேண்டிக் கொள்வேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச்சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிற படியால் அவரைப் பெற்றுக் கொள்ளமாட்டாது. அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.

### கற்பனைகளைக் கைக்கொள்வீர்

நான் உங்களைத்திக்கற்றவர்களாக விடமாட்டேன். உங்களிடத்தில் வருவேன். இன்னும் கொஞ்சக் காலத்தில் உலகம் என்னைக் காணாது. நீங்களோ என்னைக்காண்பீர்கள், நான் பிழைக்கிற படியினால் நீங்களும் பிழைப்பீர்கள் நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள். என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான் என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான். நானும் அவனில் அன்பாயிருந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார் இயேசு.

### பிதாவின் அன்பு பெறுங்கள்

ஸ்காரியோத்தல்லாத யூதா என்பவன் அவரை நோக்கி, ஆண்டவரே நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப் போகிற காரணமென்ன என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான் அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடு வாசம்பண்ணுவோம்என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ள மாட்டான்.

நீங்கள் கேட்கிற வசனம் என்னுடைய தாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்; என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவான்.

### பிதா பெரியவர்

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக, நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே, நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்கு போகிறேனென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள். ஏனெனில் என்பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார். இது நடக்கும் போது நீங்கள் விசுவாசிக்கும் படியாக நடப்பதற்கு முன்னமே இதை உங்களுக்குச் சொன்னேன்.

இனி நான் உங்களுடன் அதிகமாகப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை. நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன் என்றும், உலகம் அறியும்படிக்கு இப்படி நடக்கும். எழுந்திருங்கள். இவ்விடம் விட்டுப் போவோம் வாருங்கள் என்றார்.

### உலர்ந்த கொடிகள் எரிந்து போம்

நான் மெய்யான திராட்சைச்செடி, என்பிதா திராட்சைத் தோட்டக்காரர். என்னில் கனி கொடுக்காதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார். கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக்கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார். நான் உங்களுக்கு சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள். என்னில் நிலைத்திருங்கள். நானும் உங்களில் நிலைத்திருப்பேன். கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திரா விட்டால் அது தானாய் கனி கொடுக்க மாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்க மாட்டீர்கள். நானே திராட்சைச் செடி. நீங்கள் கொடிகள் ஒருவன என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையல்லாமல் உங்களால் ஒன்றுமே செய்யக் கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால் வெளியே எறியுண்ட கொடியைப் போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான், அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியில் போடுகிறார்கள. அவைகள் எரிந்துபோம். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என்பிதா மகிமைப் படுவார்; எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.

யோவான் சுவிஷேஷம்

தொகுப்பு: மதிவாணர்

## மகிழ வெட்டுவான்மக்களை மீளக்குடியமர அழைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மகிழவெட்டுவான், வீரக்கட்டாறு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களை மீளக்குடியமருமாறு தமிழீழ விடுதலைப் புலிகள அறிவித்துள்ளனர்,

கடந்த 12வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை மற்றும் பொருளாதாரத் தடை காரணமாக மக்கள் அப்பிரதேசங்களை விட்டுவெளியேறி இருந்தனர்.

இப்பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 105 குடும்பங்கள் வந்தாறு மூலை, பாலாச்சோனை ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-8)

## தினசரி தியானம்

### தியானத்தின் பெருமை

தியானத்தில் ஒழுங்கு மிக அவசியமானது; ஆரம்பத்தில் அது வெறுப்பைத்தந்தாலும் நாளடைவில் உயர்ந்த இன்பத்தை அளிக்கும்; சம்சாரமாகிய சாகரத்தை ஒருவர் தியானத்தின் மூலமாகத்தான் கடக்கமுடியும், தியானத்தின் பயனாகக் கிடைக்கும் இன்பத்தைப் புலன் வழி அனுபவிக்கும் பொருள்களிலிருந்து ஒரு போதும் பெற முடியாது; அளவிறந்த மன வலிமையையும், மேலான இன்பத்தையும் குறைவில்லாத நியமதியையும் தியானம் தருகிறது;

சுவாமி சிவானந்தர்

பல்கலைக் கழகங்களில் இடம்பெற்ற

## மோதல் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு

(கொழும்பு)

கொழும்பு, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரஆகியபலகலைககழகங்களில் அண்மையில் நடந்த கலவரங்கள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு மூன்றாம் நிலைக்கல்விஅமைச்சர் கபீர் ஹாசிம் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவைப்பணித்துள்ளார்.

சக மாணவர்களுடனான மோதலில் காயமுற்றஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்களை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பார்வையிட்ட பின்னரே அமைச்சர் இப்பணிப்புரையை விடுத்துள்ளார்.

அதேவேளை பல்கலைக் கழகங்களில் தற்போதுஇடம் பெற்றுவரும் மோதல்களுக்கு சில அரசியல் கட்சிகளே காரணமாக இருப்பதாகவும்அவர் தெரிவித்துள்ளார். உ-8)

## கிருஷ்ணபிள்ளை எம்.பி. பகிஷ்கரிப்பைக் கைவிட்டார்

(மட்டக்களப்பு)

பாராளுமன்ற பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்த மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைபபு பாராளுமன்ற உறுப்பினர் ஞா. கிருஷ்ணபிள்ளை, தனது பகிஷ்கரிப்பை நேற்று முன் தினம் முதல்கைவிட்டுளளார்.

கடந்த 29 ஆம் திகதி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு சென்ற வேளை இராணுவத்தினரால், சுமார் 25 நிமிடம் தடுத்து நிறுத்தப் பட்டசம்பவத்தை கண்டித்தே இவர் பாராளுமன்ற பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று முன் தினம் காலை மேற்படி பாராளுமன்ற உறுப்பினரின் இல்லத்தில் இடம் பெற்ற இராணுவ அதிகாரிகளுடனான சந்திப்பில் நடந்த சம்பவத்திற்கு அவர்கள் வருத்தம் தெரிவித்ததை அடுத்து, ஞா. கிருஷ்ணபிள்ளை நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பை உடனடியாக கைவிட இணங்கியுள்ளார்.

இச் சந்திப்பில் இராணுவத் தளபதி லயனல் பலகல்லவின் பணிப்பின் பேரில் மின்னேரியாவின் 23 வது படைப் பிரிவு கட்டளைத் தளபதி பிரிகேடியர் எஸ். ஆர். பாலசூரிய மற்றும் மட்டககளப்பு 23. 3 வது கட்டளைத் தளபதி கேணல் ஆர்டி. சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(உ 8)

# புலிகளின் இறுதி நோக்கத்தை அறியாமல் பாதுகாப்புச் செலவை குறைக்க முடியாது

## வரவு செலவுத்திட்ட விவாதத்தில் நவின் திஸநாயக்கா

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் இறுதி நோக்கம் என்ன என்பதை அவர்கள் இன்னமும் தெளிவாக அறிவிக்காத நிலையில் பாதுகாப்புச் செலவீனங்களுக்கான ஒதுக்கட்டை குறைக்க முடியாது.

இவ்வாறு வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பெருந் தோட்ட கைத்தொழில் பிரதி அமைச்சர் நவின் திஸநாயக்கா தெரிவித்துள ளார்.

வரவு செலவுத் திட்ட விவாதத் தில் கலந்து கொண்டு உரையாற் றிய தமிழர் தேசிய கூட்டமைப் பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப பினர் ஜோசப்பரராஜசிங்கம், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் எடுத்து வரும் நடவ டிக்கைகளைக் கருத்தில் கொண்டே தாம் வரவு செலவுத் திட்டத்தை ஆதரிப்பதாகத் தெரிவித்திருந்தார்.

மேலும் வரவு செலவுத் திட்ட த்தை ஆதரிக்கின்ற போதும், அதில் பாதுகாப்புச் செலவீனம் அதிகரித்திருப்பது குறித்து அவர் தமது ஆதங்கத்தை தெரிவித்தி ருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும்வகை யிலேயே நவின் திஸநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்:- நாட்டின் பாதுகாப்பை பேணுகின்ற நோக்கத்தை அரசு உணர்ந்து செயற்படுவதையே வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவீ னம் அதிகரித்திருப்பது காட்டு கின்றது என்றும் கூறினார். (இ)

## அரசாங்கத்தை கைப்பற்றும் எண்ணம் பொ.ஐ.முன்னணிக்குக் கிடையாது!

### ஜனாதிபதி சந்திரிகா உரை



(கொழும்பு)

நாட்டில் தற்போது எழுந்துள்ள சூழ்நிலையில் "அரசாங்கத்தைக் கைப்பற்றும் எண்ணம் எதுவும் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு இல்லை. மக்கள் இந்த அரசாங் கத்தின் மீது வெறுப்புக் கொண்டுள் ளார்கள். இந்த வெறுப்பு படிப்ப டியாக அதிகரித்து அரசாங்கம் வீழ்ச் சியடையும் என ஜனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்கா தெரிவித்துள் ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி யின் செயற்குழுக் கூட்டம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடை பெற்றது. அக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள் ளார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசு கையில்,இராணுவத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லாத நிலையிலும் யுத்த செலவீனம் இன்னமும் குறைக்கப்படவில்லை.யுத்த செல வீனம்அதிகரிக்கக் கூடிய சாத் தியக் கூறுகளே அதிகம் காணப் படுகின்றது.19வது அரசியல் சீர்திருத்தத்தைக் கொண்டு வரு வதன் மூலம் சர்வாதிகார ஆட் சியை ஏற்படுத்துவதையே அரசு நோக்கமாகக் கொண்டிருந்தது என்றும் ஜனாதிபதி குறிப்பிட் டார்.

இதேவேளை நேற்றைய கூட்டத் தில் சிறி லங்கா சுதந்திரக் கட் சியில் சர்ச்சைக்குரியவரான முன்னாள் அமைச்சர் றிச்சட் பத் திரான சமுகம் கொடுத்திருந்த போதும், அவரை வெளியேறுமாறு கட்சியின் ஏனைய உறுப்பினர் கள் கூக்குரலிட்டனர். இதனை அடுத்து றிச்சட் பத்திரான கூட்டத்தை விட்டு வெளியேறினார். (ம)

## மீளக்குடியமர்த்தக் கோரி
## பருத்தித்துறை கொட்டடிப் பகுதி மக்கள் மறியற்போர் நடத்த முஸ்தீபு

(திருநெல்வேலி)

பருத்தித்துறை கொட்டடிப் பகுதி மக்கள் தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறுகோரி அடுத்த வாரம் முதல் தொடர் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, பாது காப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ மற்றும் படை உயர் அதிகாரிகளுக்கு நேற்று அவசர கடிதம் ஒன்றை அப்பகுதி மக்கள் அனுப்பி வைத் துள்ளனர்.

1996ம் ஆண்டு இப்பகுதியி லிருந்து இடம் பெயர்ந்த 80குடும் பங்களில் தற்போது 10குடும்பங் களையே மீளக்குடியமர படை யினர் அனுமதித்திருப்பதாகவும், ஏனையோரை மீளக்குடியமர படையினர் அனுமதி மறுத்து வரு வதாகவும், அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை கொட்டடி கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இம் மறியல் போராட்டத்துக்கு ஏனைய கடற்றொழில் கூட்டு றவுச் சங்கங்களையும் ஆதரவு தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-5-43)

## ஈ.பி.டி.பியின்....

அனலைதீவில் பெண் ஒருவரை காதலித்திருந்தார் என்றும் அவரைத் திருமணம் செய்து கொள்வதற்காக தம்மிடம் அனுமதி பெற்றிருந்தார் என்றும். இதற்காக அவர் விடுமுறையில் சென்றிருந்தார் என்றும் ஈ.பி. டி.பி அமைப்பினர் தெரிவித்துள்ள னர்.

அத்துடன் அவரது மரணம் தொடர்பாக தமக்கு அதிர்ச்சியா கவுள்ளதாகவும், விசாரணைக ளின்போது உண்மை தெரியவரு மென்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து அனலைதீவுப்பகுதியில் பெரும் அச்சம் நிலவுகிறது.

இதேவேளை நேற்று மாலை பிரஸ்தாப நபரின் சடலத்தை மீட்ட ஊர்காவற்துறைப் பொலி சார் அதனை நள்ளிரவு 11.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத் துள்ளனர். (த)

## படகைக் காணவில்லை

(திருநெல்வேலி)

வடமராட்சி சுப்பர் மடம் பகு திக் கடலில் தரித்து நின்ற 3இ லட்சம் ரூபா பெறுமதியான பட கொன்றைக் காணவிலலை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத்தில முறைபபாடு செய்யப்பட்டுள்ளது. (இ-5-43)

## சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு ரூ. 4லட்சம் அன்பளிப்பு

(திநெல்வேலி)

வடமராட்சியில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ் வரன் 4இலட்சம் ரூபாவை அன்ப ளிப்பாக வழங்கியுள்ளார்.

இந் நிதி ஆச்சிரம புனரமைப் புக்கு பயன் படுத்தப்படவுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5-43)

## தந்தையும் மகனும் தாக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் வாய்பேச முடியாதவர்களான தந்தையும் மக னும், கடை உரிமையாளர் ஒரு வரினால் கடுமையாகத் தாக்கப் பட்டு, படுகாயமடைந்த நிலை யில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

நேற்றுக் காலை 10 மணியள வில் இடம் பெற்ற இச் சம்பவத் தில் போட்டோக் கடை உரிமை யாளரான கெங்காதரம் பிள்ளை (வயது62), அவரது மகன் பிரகாஸ் (வயது19) ஆகிய இருவருமே தாக்கப்பட்டு படு காயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த)

## திருமலையில் தமிழீழக் காவல்த்துறை

(திருகோணமலை)

திருகோணமலைச் சம்பூர்க் கிராமத்தில் தமிழீழ காவலத் துறைப்பணிமனை நேற்றுமுன்தி னம் திறந்து வைக்கபட்டுள்ளது. இப்பணிம னையின் பொறுப்பாளராக தேவதாஸ், மேற்பார்வையாள ராக அவைக்குமரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பணிமனை திறந்து வைக்கப் பட்டதைத் தொடர்ந்து பணப்பி ணக்குத் தொடர்பான முதலாவது முறைப்பாடொன்று செய்யப்பட் டது.

திருகோணமலை மாவட்ட நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட மக்களது முறைப்பாடுகளை இக் காவல்த்துறைப் பணிமனை ஏற்றுக் கொள்ளும் என தலை மைக் காவலர் வினோஜினி தெரி வித்தார்.

இதேவேளை மேற்படி காவல் துறைப் பணிமனைத் திறப்பு விழாவில் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறு ப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (த)

## பாதுகாப்பு உப...

சார்பில் கேணல் கருணா அம் மானும் தலைமை தங்கவுள்ளனர்.

அரச தரப்பில், தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட மேஜர் ஜெனரல் சரத் கொன்சேகா மற்றும் விமானப் படை, கடற்படையின் உயர் அதிகாரிகளும், பொலிஸ் படை உயர் அதிகாரிகளும் கலந்து கொள்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் சார்பில் கேணல் கருணா அம்மானுடன் கேணல் பதுமன், கேணல் தீபன், கேணல் பானு, யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, மட்டக்களப்பு அரசி யல்துறைப் பொறுப்பாளர் கௌசல் யன், வவுனியா மாவட்ட அரசி யல் துறைப் பொறுப்பாளர் எழி லன் ஆகியோரும் கலந்து கொள் வார்கள்.

இம் மாநாட்டின் போது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நோர்வே உயர் ஸ்தானிகர் குழு வினரும் பிரசன்னமாக இருப்பார் கள். (ம)

## இலங்கைக்கு........

மகிழ்ச்சி அடைவதாகவும் இம் மாதம் 25ந் திகதி ஒஸ்லோவில் நடைபெறும் நிதி உதவிக் கூட்டத் திற்கு தான் வருகை தருவதாக வும் தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பு தொடர்பாக அமெ ரிக்காவில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் தற்போது தாய்லாந்தில் மேற்கொண்டுவரும் சமாதானப் பேச்சுவாரத்தை இல ங்கை இனப்பிரச்சினைக்கு தீர் வொன்றை பெற்றுத்தருவதுடன் நாட்டின் இறைமை மற்றும் மனித உரிமைகளைப் பேணும் விடயத் திலும் சாதகமான பெறுபேற்றை பெறறுத் தரும் என அமெரிக்கா நம்புகிறது என்றும் பிரதி இரா ஜாங்க அமைச்சர் தெரிவித்துள் ளார்.

அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சரை, அமைச்சர் மலிந்த மொறகொட சந்தித்த போது அமெரிக்க இராஜாங்க திணைக் கள துணை அமைச்சர் கிறிஸ்ரீனா றொக்காவும் உடன் இருந் தார்.

அமைச்சர் மிலிந்த மொற கொட அமெரிக்கத் தேசிய பாது காப்புப் பேரவையின் தலைவர் ஜிம்மொறாக்கி மற்றும் பாதுகாப்பு திணைக்கள அதிகாரி பீற்றர் றொட்மான் ஆகியோரையும் சந் தித்துப் பேச்சுக்கள் நடத்தியுள் ளார்.

இதேவேளை ஒஸ்லோவில் நடை பெறவுள்ள இலங்கைக்கான நிதியுதவி வழங்கும் மாநாடு தொடர்பாகவும் உலகவங்கியின் நிர்வாகப்பணிப்பாளர் சேய்மான் ஷாங்கையும் அமைச்சர் மிலிந்த மொறகொட சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். (ம,த)

## மீட்புநிதிக் கடன் சான்றிதழை தவறவிட்டோர் கவனத்திற்கு

தமிழீழ மீட்புநிதிக் கடன் சான்றிதழைத் தவறவிட்டோர். 2002 ஆம் ஆண்டிற்கான மீட்பு நிதி மீளளிப்புப் பட்டியலில் தமது பெயர் தெரிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்கு எற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடையாள ஆவணத்துடன் கீழ்க் காணும் நேர அட்டவணைக்கிணங்க வருகை தந்து 2002 ஆம் ஆண்டிற் கான மீட்பு நிதி மீளளிப்புப் பட்டிய லைப் பார்வையிட்டுத் தமது தெரிவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு நிதிப் பொறுப்பாளர் கேட்டுள் ளார்.

**12.11.2002 (செவ்வாய்)**

அரசியல் துறைச் செயலகம் வடலியடைப்பு, (காலை 8.00-11) அரசியல் துறைச் செயலகம் சண்டி லிப்பாய, (நண்பகல் 12.00-2.00) சோதிவேம்படி மகளிர் கல்லூரி மானிப்பாய், (பிற்பகல் 3.30-4.30)

**13.11.2002 (புதன் )**

அரசியல் துறைச் செயலகம் சுன்னாகம் (காலை 8.00-10.00) அரசியல் துறைச் செயலகம் நீர் வேலி, (முற்பகல் 11.00-1.30) மங்கையர்க்கரசி மகாவித்தியா லயம் நல்லூர், (பிற்பகல் 2.30-4.30)

**14.11.2002 (வியாழன்)**

அரசியல்துறைச் செயலகம் வல்வெட்டித்துறை, (காலை 8.00-9.30) அரசியல்துறைச் செயலகம் தம்பசிட்டி, (முற்பகல் 10.30-1.30) அரசியல்துறைச் செயலகம் வதிரி கரவெட்டி, (பிற்பகல் 2.30-4.00)

**15.11.2002 (வெள்ளி)**

அரசியல்துறைச் செயலகம் கைதடி, (காலை 8.00-9.00) அரசி யல்துறைச் செயலகம் சங்கத்தா னை, (முற்பகல் 10.00-12.30) அரசியல்துறைச் செயலகம் கொடி காமம், (பிற்பகல் 1.30- 3.00)

**16.11.2002 (சனி)**

அரசியல்துறைச் செயலகம் வேல ணை, (காலை 8.00-9.00) வீரசிங் கம் மண்டபம் யாழ்ப்பாணம், (முற்பகல் 11.00-2.30)

**17.11.2002 (ஞாயிறு)**

மத்திய கல்லூரி கிளிநொச்சி, (காலை 8.00-12.00).


## எங்கள் பற்றிய உங்கள் சிந்தனைக்கு!



"சிறுவரின் மகிழ்ச்சி பாரிந்து எழுச்சி"
வெளியீட்டு அனுசரனை
SC(UK)

என் அன்பான பெரியோரே!

"மகிழ்ச்சி என்பது மனதுக்கு உணவு அதனை அடைவதே மழலையின் கனவு" என்பதை இப்போது நீங்கள் மறந்திருக்கக் கூடும். உங்கள் மழலைக் காலத்து மனதடம் கேட்டுப்பாருங்கள், மகிழ்ச்சியான சூழலின் மகத்து வத்தை அது சொல்லும்!

மழலை ஒன்றின் மகிழ்ச்சியான சூழலானது அன்பையும் அரவணைப்பையுமே அடித்தளமாகக் கொண்டது. அதட்டல கள், அழுத்தங்களால் நீங்கள் செய்யும் ஒரே ஒரு சாதனை உங்கள் பிள்ளைகளின் ஆளுமையைச் சிதைப்பது மட்டும் தான்!

எனவே அவர்களை அரவணையுங்கள், அன்பாகச் சொல் லுங்கள், என்னைப் போல் ஒரு மகிழ்வான சிறுமி/சிறுவன் உங்கள் வீட்டிலும் உலா வருவர்.

அன்பிற்காய் ஏங்கும் சிறுவர்களின் தோழி

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் - 30
யாழ்.போதனாவைத்தியசாலை,
யாழ்ப்பாணம். T.P.021 - 2222261 EXT 274.

[C/5235]


இப்பபுத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 10.11.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.